# மோட்ச முழக்கம்

(கவிதைத் தொகுப்பு)



லுணுகலை - ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ச முழக்கம்

[கவிதைகள்]

ஜுனுகலை - ஸ்ரீ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | **மோட்ச முழக்கம்**<br>(கவிதைத் தொகுப்பு) |
| ஆசிரியர் | : | **லுணுகலை - ஸ்ரீ** |
| உரிமை | : | **ஆசிரியருக்கு** |
| முதற் பதிப்பு | : | **செப்டெம்பர் 2007** |
| பக்கங்கள் | : | **114** |
| அட்டைப்படம் | : | **கலைஞர் கலைச்செல்வன்** |
| கணினி வடிவமைப்பு | : | **அருந்ததி பிரசாந்தன்** |
| வெளியீடு | : | **தினு பதிப்பகம்**<br>31/1, லுணுகல கம,<br>லுணுகலை, பதுளை.<br>தொலைபேசி : 060 - 2553272<br>மின்னஞ்சல் : lunnugalasri@yahoo.com |
| அச்சகம் | : | **ஸ்ரீ கணேசா அச்சகம்**<br>இல. 72, கே. சிறில்.சி.பெரேரா மாவத்தை,<br>கொழும்பு - 13. ஸ்ரீலங்கா.<br>தொலைபேசி : 011-2433465, 077-3051171<br>மின்னஞ்சல் : ganeshaprint@sltnet.lk |
| நூல் பெறுமிடம் | : | **பூபாலசிங்கம் புத்தகசாலை**<br>இல. 202, செட்டியார் தெரு,<br>கொழும்பு - 11. |
| விலை | : | **ரூபா 150.00** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம் ....



கவி வம்ச வழியில் - நான்
கருவாகவில்லை; - என்
கவிகண்டு எனை உசுப்ப - எந்த
குருவும் கரம் தந்ததில்லை; - எனை
எழுத வைத்த பரம் பொருளே....
எந்தன் பிரான் ஈஸ்வரனே.....
தும்பி கையானை - எனக்கு நீ
துணை வைத்ததன்றி,
கலைமகளாக நீயே நின்றெனக்கு
அருளிய கடாட்சமின்றி - இந்நூல்
உருவாக இன்னொரு காரணி
எதுவும் இல்லை; எனும்போது
ஐயனே! எனதிந்த கன்னி நூல்
உந்தன் திருவடிக்கே....

அ(சம)ர்ப்பணம் !!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் கா.சிவத்தம்பி, பெரியார் கம்பவாரிதி இ. ஜெயராஜ்
ஆகியோருடன் நூலாசிரியை லுணுகலை - ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

**ஊ**ணுகலை - ஸ்ரீ என்ற புனைபெயருடன் கவிதைகள் எழுதும் ராதிகா பெருமாள் தானெழுதியுள்ள தொகுதிக்கு எனது முன்னுரையை வேண்டிக் கேட்டுள்ளார்.

அவரது ஆர்வமும், வினையமும் என்னைப் பெரிதும் கவருகின்றன. அவருடைய செயற்பாட்டில் ஓர் உண்மைத்தன்மை இருப்பதாக எனது நெஞ்சு சொல்கிறது.

இத்தகைய ஆர்வமுள்ள, எண்ண நேர்மையுள்ள அதேவேளையில், வளச் செழுமைச் சாத்தியப்பாடுள்ள கலைஞர்களை ஊக்குவது மானிட நிலைக் கடமை என்றே சொல்ல வேண்டும். அதேவேளையில் அவர்கள் ஆர்வங்காட்டுந்துறையிலுள்ள ஆழ, அகலங்களை எடுத்துச் சொல்ல வேண்டுவதும் அனுபவஸ்தருக்கான கடமையாகிறது. இந்த நிலையில் நின்று கொண்டே இந்நூலுக்கான முன்னுரையாகச் சில குறிப்புரைகளைக் கூறவிரும்புகிறேன்.

ஓரிரண்டு சிறுகதைகளை எழுதியவரைக் கூடச் "சிறுகதையாசிரியர்" என்று குறிப்பிடலாம், குறிப்பிடுவதும் மரபு. அப்படியானால் கவிதைகளை எழுதுபவர்கள் எல்லோரையும் "கவிஞர்" என்றுதானே குறிப்பிட வேண்டுமென்பது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது நியாயமுள்ள ஒரு நிலைப்பாடாகவே தோன்றும். ஆனால் கவிஞர் எனும் சொல், சொல்லின் பிரயோகம் சற்று வித்தியாசப்பட்டது. அதனிலும் மேலான முக்கியத்துவமுள்ள விடயம், கவிதை எழுதுவதும் சம்பந்தமான படைப்பாக்க நிலைமைகளாகும். இவ்விடயத்தை சற்று ஆழமாகவே நோக்க வேண்டும்.

ஒருவர் கவிதை எழுதுகிறாரென்றால் உடனடியாக அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது "கவித்துவ" மனநிலையே ஆகும். கவித்துவ மனநிலையென்பது யாது? இதற்கு மிகச் சுலபமாக "கவிதை எழுதுவதற்கான மனநிலை" என்று பதில் கூறி விடலாம். ஆனால் கவிதையெழுதுவதற்கான மனநிலையென்பது சுலபமாக விளங்கப்படக் கூடிய அன்றேல் விளக்கப்படக்கூடிய ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று அதன் வடிவநிலை. அதன் வெளிப்படுநிலை. பலர் இதனை வடிவ நிலை என்று கூற முனைவர். வடிவம் என்றவுடன் வடிவம், பொருள் என்ற வழமையான எதிரெதிர் நிலைப்பாடு தோன்றிவிடலாம். அதனாலேயே வெளிப்பாடு நிலையென்று குறிப்பிட விரும்புகின்றேன்.

''வடிவம்'' எனும்பொழுது காணப்பெறும் கருத்து நெகிழ்ச்சியின்மை ''வெளிப்படுநிலை' என்ற தொடரில் இல்லை.

வெளிப்படுவதாகிய விடயம் / பொருள், இது வெறுமனே எந்த விடயம் பற்றி எழுதப்படுகிறது என்பது அல்ல, எழுதப்படுகின்ற விடயம் எவ்வாறு பார்க்கப்பட்டுள்ளது என்பதுதான் கவிதைக்கு முக்கியம். ''பார்க்கப்பட்டுள்ளது'' எனும் பொழுது மனநிலை முக்கியமாகிறது. இதனை ''கவித்துவ நிலை'' என்று பொதுப்படையாகக் கூறலாம். இது நிச்சயமாக உணர்நிலைப்பட்டது.

இவ்விடத்தில் அறிதல், உணர்தல் என்ற சொற்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளல் வேண்டும் *(Know / feel)* உண்மையை அறிதல் என்பதற்கும், உண்மையை உணர்தல் என்பதற்குமுள்ள வேறுபாட்டை நோக்கவும், அறிதல் எனும்பொழுது அதற்குள் விஞ்ஞான பூர்வமான அல்லது தர்க்க நிலைப்பட்ட ஒரு காரண காரியத் தொடர்பு உண்டு. அந்தத் தொழிற்பாட்டில் உணர்ச்சிகளுக்கு அதிக இடமில்லை. உண்மையில் உணர்ச்சிகளுக்கு இடமிருக்கவே கூடாது.

ஆனால் உணர்தல் என்பது புலன்கள் நிலைப்பட்டதாகவும், அதே வேளையில் புலன்களுக்கு மேலான (அப்பாலான) ஒரு போதை உணர்வு தொழிற்படும். இவ்விடத்திலே ஞானம் என்ற சொல்லுக்கு இடமுண்டு. ஞானத்தின் பிரதான அம்சம் தெளிவு (தெளிநிலை) என்பதாகும்.

'கவித்துவம் என்பது இவற்றுக்கான ஒரு தொடக்கமே. ஏற்கனவே கூறியது போல இதில் உணர்வு எனும் நிலையே முக்கியமானதாகும் ''உணர்வு'', ''உணர்ச்சிகளுக்கு'' அப்பாலான ''உணர்கை''யே இங்கு சுட்டப்பெறுகிறது.

கவித்துவத்துக்கு வேண்டிய உணர்நிலையை பின்வரும் வாக்கியங்கள் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குழந்தை தாயைக் கண்டு சந்தோஷப்பட்டது''
''குழந்தை தாயைக் கண்டு முகம் மலர்ந்தது''

சந்தோஷமடைந்தது என்ற யதார்த்த நிலையை முகம் மலர்ந்தது எனும்பொழுது (மலர்ந்தது என்பதிலுள்ள உருவகத்தை நோக்கவும்) பூ விரிவது போல முகத்தில் ''மலர்வு'' ஏற்படுகிறது என்பது கருத்து. அப்படிச் சொல்லும்பொழுது சொல்பவரின் மனநிலை முக்கியமாகின்றது. இங்கு நிகழ்ச்சியிலும் பார்க்க நிகழ்ச்சி பார்க்கப்படும் முறையே முக்கியமாகிறது.

கவிஞர் கவிதை என்ற சொற்களின் கருத்தை உணர்தல் வேண்டும். இவற்றில் ''கவி''யென்பதே அடிச்சொல்லாகும். இது ஒரு சமஸ்கிருதச் சொல். 'கவி'யென்பது உள்நோக்கிப் பார்ப்பவராவார். கவிதையில் இந்த ''உள்நோக்கம்'' மிக முக்கியமாகும். மற்றவர்கள் கண்களுக்குப் படாதது கவிஞருக்குபடும். இந்த உள்நோக்கிப் பார்கின்ற தன்மை யினாலேயே அறிகையிலும் பார்க்க உணர்கை முக்கியமாகின்றது.

மேலே சொன்ன உள்நோக்கிப் பார்த்தல் என்னும் கவிநிலை நோக்கு உண்மையில் எந்த ஒரு படைப்பாக்கத்திற்கும் முக்கியமானதாகும். அத்துடன் உள்ளுயிர்ப்பு உந்துதலுள்ள எல்லோரிடத்தும் இந்தக் கவித்துவமுண்டு. இதனாலேயே எடுத்துரைப்புப் பரீட்சையமுள்ள எல்லோருமே தங்களுடைய ஆரம்ப நிலையில், ஏறத்தாழ இன்றியமையாத ஒரு மனநிலையிலே சில கவிதைகளை எழுதியிருப்பர்.

இங்கேதான் நமது பிரச்சினை ஆரம்பிக்கின்றது. கவித்துவ உந்துதல்கள் காரணமாகக் கவிதை எழுதுபவர்கள் எப்பொழுது கவிஞர்களாகிறார்கள் என்பதொரு முக்கியமான வினாவாகின்றது.

பல இளங்கவிஞர்கள் கவித்துவமுடையவர்களாகவிருப்பர். ஆனால் ஆழ அகலமான கவிஞர்களாக முகிழ்வதென்பது அவர்கள் கவிதைவரிகளுக்கப்பாலே போய் மேலே சொன்ன உள்நோக்கினை பிரக்ஞைப் பூர்வமாக வளர்த்தெடுத்துக் கொள்வதாகும்.

இந்த விடயத்தினைக் குறிப்பாக இளங்கவிஞர்கள் மனங்கொளல் வேண்டும். கவிதைகள் எழுதத் தொடங்கியவுடனே கவிஞர்களாகிவிட முடியாது. அது ஒரு படிநிலை வளர்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரெனும்பொழுது அந்த நிலைக்குத் தளமாக உள்ளது கவிஞரின் ''பார்வை முழுமையாகும்'' பார்வை முழுமை எனும் தொடரை விளக்க வேண்டியது அவசியமாகின்றது. ஒரு விடயத்தின் இயல்புகளை நன்கு விளங்கிக் கொண்டு அதற்கு மேல் அதனை பல்வேறு கண்ணோட் டங்களிலிருந்து நோக்கி, அது சரியோ, பிழையோ அது காணப்படுவதற்கான நியாயப்பாடு என்பவற்றை விளங்கிக் கொள்வதாகும். இப்படியானவொரு விளக்கநிலை ஏற்படுகின்றபொழுது பாடப்படும் பொருள் பற்றிய, பாடல்களில் வரும் சொற்களுக்கூடான சிலவேளைகளில் சொற்களுக்கப்பாலான ஒரு உண்மை பளிச்சிடும். உண்மையான கவிஞர்களிடத்து இந்தப் பார்வை முழுமையைக் காணலாம். உதாரணத்துக்கு, பாரதியின் கண்ணம்மா ஒரு குழந்தை என்ற பாடலை நோக்குவோம். (சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா..... என வரும் பாடல்) இப்பாடலை தெரிவதற்கு முன்னர் நாம் குழந்தைகளைக் கண்டிருப்போம். அவர்களாலே கவரப்பட்டுமிருப்போம். ஆனால் சின்னஞ்சிறு கிளியே என்ற பாடலை முழுமையாக வாசிக்கும் பொழுதுதான் ஒரு குழந்தைக்குள் இவ்வளவும் இருக்கின்றனவே என்ற மன அதிர்வு ஏற்படும். அந்தப் பாடலைச் சரியாக உள்வாங்கிவிட்டால் அந்தப் பாடலைப் படிக்கும் பொழுது நமக்குத் தெரிந்த எத்தனையோ குழந்தைகள் நினைவுக்கு வருவார்கள். அதிலும் பார்க்க முக்கியம் பாடலைப் படித்த பின்பு எந்தக் குழந்தையைப் பார்க்கும் பொழுதும் இந்தப் பாடல் வரிகள்தான் நினைவுக்கு வரும். அப்பொழுதுதான் அந்தப்பாடல் வரிகள் மேலும் விளங்குவது போலவிருக்கும்.

இந்த அனுபவத்தை பாடல் பொருளின் தன்மைக்கேற்ப மாற்று நிலைப்படுத்திப் பார்க்கலாம். தாயுமானவரின் பாடல்களுக்குள்ளே இறங்கும் பொழுதுதான் கடவுள் பற்றிய விளக்கத்துக்கான நுண்ணுர்வுகள் தெரிகின்றன. மலர் இதழ்கள் போன்று விரிகின்றன. தாயுமானவருடைய பாடல்களின் கருத்துக்களிலேயுள்ள ஆழத்துக்குப் போகும் பொழுதுதான் நாம் நமது சிந்திப்பு நிலையில் மேலும் மேலும் உயரப் போகிறோம்.

இப்படிப் பார்க்கும் பொழுதுதான் மேலே சொன்ன பார்வைக்கு ஒரு கருத்து நிலைத்தளம் அவசியம் என்பது புலனாகும். கருத்து நிலையென்பதை ஆங்கில சொல்லான *(Idiolngy)* என்பதன் மொழிப் பெயர்ப்பாகவே சொல்லுகிறேன். கருத்து நிலையெனும் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் ஒரு பார்வை முறை (உண்மையில் பார்க்கும் முறையை) அதற்கான நியாயப்பாடுகள், அப்படிப் பார்ப்பதற்கான தேவைகள் எல்லாமே வரும். சிலர் இதனை கருத்தியல் என்று மொழி பெயர்ப்பார்கள். அது பொருந்தாது என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில் அல்தூஸர் வழியாக வந்த விளக்கங்களின் பின்னர் *Idiolagy* என்பதற்கு ஒன்றைப் பார்ப்பதற்கான இடம், காலம், தேவை ஆகியன முக்கியம் என்பது தெரியும். அது உண்மையில் அக்கருத்து நம் நெஞ்சினுள்ளே நிற்கின்ற நிலைமைதான், அதில் முக்கியமாகின்றது.

கருத்து நிலைகள் வெவ்வேறு வகையான வெளிப்பாடுகளைக் கொண்டு வருகின்றன. அது தெய்வ எதிர்ப்பாகவும் இருக்கலாம். தெய்வப் போற்றுகையாகவுமிருக்கலாம் நம்மைப் பொறுத்தவரையில் அந்த எதிர்ப்பின் அல்லது போற்றுகையின் உண்மைத் தன்மையும் நேர்மைத் தன்மையுமே *(Geniuess and siencerty)* முக்கியமானவை. கவிஞரின் கருத்து நிலை ஒரு பொருளின் மீது விழுகின்றபொழுது அது தனக்கென ஒரு புனிதத்துவத்தை கொண்டு விடுகிறது. இந்தப் புனிதத்துவமென்பது மதத்துக்குள் நிற்பதுமல்ல, மதத்தோடு நின்றுவிடுவதுமல்ல.

பாரதியளவு ஆழங் காணப்படவில்லையென்றாலும் அது தேசிக விநாயகம்பிள்ளையிடத்திருந்தது, தொடக்க நடுக்கால பாரதிதாசனிடத்து நிறையவிருந்தது. சிறிதளவே எழுதினாலும் தமிழொளியிடத்திருந்தது. முருகையன், மகாகவி, நீலாவணனிடத்து காணப்படுவது. இப்படிப் பார்க்கும் பொழுதுதான் கவித்துவத்துக்குள் ஓர் உயிர்ப்பு நிலைப்பயணம் உள்ளடங்கி நிற்கின்றது, என்பது தெரிகின்றது. *(spiritual Journey - spiritual)* என்பதை ஆத்மீகம் என மொழிபெயர்த்து அதன் கருத்துப் பரப்பை வரையறுக்க விரும்பவில்லை)

மேலே கூறியனவற்றை தந்திருப்பதற்கான காரணம் ஒருவரது கவிதைகளின் முதல் தொகுப்பே அவரை கவிஞராக்கிட முடியாது என்பதுதான்.

இந்தத் தொகுதியைப் பார்க்கும்பொழுது லுணுகலை-ஸ்ரீயின் கவித்துவம் எல்லாவிடங்கலில்லை என்றாலும் அது நிச்சயமாக உள்ளது. (முரனிலை வார்த்தைகளுக்குள்ளே சொற்சாதுரியம் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான வேளைகளிலே கவிதையிருப்பதில்லை) புதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையென்பது சொற்சாதுர்யம் அல்ல) கவிதை மனநிலை உணர்ச்சிகளைத் தளமாகக் கொண்டது. ஆனால் இறுதியில் ஓர் உணர்கை ஏற்பட வேண்டும். லுணுகலை-ஸ்ரீ யிடம் கவித்துவப் பயணத்தை மேற்கொள்வதற்கான தகுதியுண்டு. இப்பொழுதுதான் பஸ்ஸில் ஏறியிருக்கார். அடுத்துவரும் தரிப்பிடங்களிலே இறங்கிவிடாமல் முழுப்பயணத்தையும் மேற்கொண்டு கவனிக்கப்படத்தக்க ஒரு கவிஞராக கணிக்கப்பட வேண்டும் என்று வாழ்த்துகிறேன். துரதிஷ்டவசமாக பெண் கவிஞர்கள் நவீன தமிழிலக்கியத்தில் முக்கிய இடம் பெற்றதாகத் தெரியவில்லை. ஸ்ரீ தனது கவித்துவப் பயணத்தை தொடர என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

உலகில் நம் தமிழ்மொழிக்கு,
கவித்துவச்செறிவில் முதன்மை உண்டு.
இரண்டாயிரமாண்டுக்கு மேற்பட்ட கவிதைப் பாரம்பரியம்,
நம் தமிழினத்தின் தலைமைப் பெருமை.
கவிதை கலைகளின் அரசி.
''எல்லை ஒன்றின்மை'' எனும் படியான,
மிக விரிந்த பொருள்களை உள்ளடக்கி,
நம் சான்றோர் செய்த கவிதைகள் ஒவ்வொன்றும்,
தங்கச் சுரங்கங்கள்.
அள்ள அள்ள வற்றாத பொருட்குகைகளான அவற்றை,
கற்றுமுடிக்க ஓர் ஆயுள் போதாது.
வற்றாத இவ் அறிவுச் செல்வத்தை வைத்திருந்தும்,
மற்றை மொழிகளிடம் மாண்பு தேடி,
ஏழைகளாய் இழிவுபடும் எம் இனத்தார் செயல்,
கையில் வெண்ணெய் வைத்து நெய் தேடும் மூடர் செயல்.
ஒப்பற்ற அக்கவிதைச் செல்வம் ஒன்றே.
உலகளாவித் தமிழர் தலைநிமிர்த்தப் போதுமானது.

☯ ☯ ☯

பொருளால் மட்டுமன்றி சொல்லாலும்,
கவிதை சுருக்கம் பெறுதற்காய்,
முன்னைப் புலவோர் கவிதைகளுக்கு யாப்பு வரைவிட்டனர்.
அங்ஙனம் யாப்பினுள் அமைந்த மரபுக்கவிதைகள்,
தீட்டப்பட்ட வைரங்களாய் இன்றும் ஜொலித்து நிற்கின்றன.
விஞ்ஞானப் பொழுதுபோக்குச் சாதனங்கள்,
மனிதரை விழுங்காத அற்றை நாளில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை முழுநேர வேலையாக்கி முதிர்ந்ததால்,
தமிழ்க்கடலுள் மூழ்கி முத்தெடுக்கும் ஆண்மை,
அந்நாட் புலவர்க்கு அமைந்திருந்தது.
தமிழை முறைப்படி கற்று முதிர்ந்த அன்றைப் புலவர்க்கு,
யாப்பு வரம்பாயன்றி வாய்ப்பாகத் துணைபுரிந்தது.
வரம்பு வாய்ப்பாக,
கவிதையுள் அவர் விதைத்த சிந்தனை விதைகள்,
விருட்சங்களாகி காலங்கடந்தும் விளங்கி நிற்கின்றன.

☯ ☯ ☯

காலப்போக்கில்,
விஞ்ஞானம் வளர வளர,
ஆயிரமாயிரம் கருவிகள் வெளிவந்தன.
அக்கருவிகள் ஒருபுறம் அறிவுத்துணை செய்தன.
மறுபுறம் அறிவு ஒருமைப்பாட்டுக்கு இடர்செய்தும் நின்றன.
செவிக்கும் விழிக்குமாய் ஈர்ப்புச்செய்த பொழுதுபோக்குக் கருவிகளால்,
கற்கும் திறனுள்ளோரும் வீணே கவனஞ் சிதைத்து,
அருமையாய்க் கிடைத்த மானுடப்பிறவியின்,
அரிதாம் நேரத்தை அவமே கழித்தனர்.
ஆதலால் அவர் தமக்கு நேரம் சுருங்க,
கற்கும் தீரமும் சுருங்கிற்று.
விஞ்ஞான மாயையுள் தாம் அகப்பட்டது அறியாமல்,
புத்தி விரித்து இதயம் சுருக்கிநின்ற இவர் தமக்கு,
மானுடர்க்கேயுரிய கல்பனா சுகானுபவம் மங்கத் தொடங்கிற்று.
மனிதமனம் விரிப்பிக்கும் கற்பனைகளை,
மானுட வளர்ச்சிக் கருவியாய்க் கருதாமல்,
யதார்த்தமுரணாய் கருதிய இவர்கள்,
நிதர்சனம் காண்பதாய் நினைந்து,
கவிதைகளில் கற்பனை அனுபவத்தைக் கத்தரித்தார்.
தம் ஆற்றலில்லா அவலம் மறைக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளின் யாப்பு உடைத்தார்.
புதுக்கவிதை என இவர் புகுத்திய புத்தாக்கம்,
வரம்பிலதாய்ப் போனதால்,
கவிதைக் கன்னியைக் கைப்பிடிக்கும் துணிவு.
நாளடைவில் நபுஞ்சகர்களுக்கும் வரலாயிற்று.
ஆளமுடியாதார் தீண்டுதலால்,
தமிழ்க்கன்னி அருவருத்து மலடானாள்.
ஆலமரங்களைப் பிரசவித்த தமிழ்க்கவிதை மரபு,
இவர்தம் செயலால் அற்பப் புற்களைப் பிரசவிக்கத் தொடங்கியது.
யதார்த்தம் பாடிய இவர்தம் கவிதைகள்,
காலமாற்றத்தால் சூழ்நிலை மாற முக்கியம் இழந்து,
சில தசாப்தங்களும் நிலைக்கமுடியாமல்
அவ்வப்போது தலைகாட்டிப் பின் அழிந்துபோயின.
நின்று நிலைக்கமுடியாத நிமிர்வில்லாக் கவிதைகளே,
இன்று நம் கவிதைத்துறையுள் எழுகின்றன.
கவிஞராய் இன்று தம்மைக் காட்டிநிற்கும்,
ஆழக்கற்க முடியாத புலவோர்,
நம் மாண்புமிகு மரபுக்கவிதைகளை,
பாரமாயும் அறிவுக்குத் தூரமாயும் கருதத் தலைப்பட்டார்.
தம் குறையை மரபுக்கவிதையில் ஏற்றி இவர் செய்த மாயத்திற்கு,
ஒரு புதிய தலைமுறை பலியாயிற்று.

☯ ☯ ☯

வரம்பில்லாப் புதுக்கவிதைகளுள்,
இயல்பாற்றல் மிக்க கவிஞர் சிலர் கால்வைத்து,
நற்கவிதை சில யாத்து வெற்றி கண்டதால்,
நம் அறிவுலகால் அப்புதுக்கவிதையும் அங்கீகரிக்கப்பட்டது.
கவித்துவம் மிக்க அப்பிறவிக் கவிஞர்களின்,
தடம் பற்றி நடப்பதாய்ச்சொல்லி,
வேலியற்ற புதுக்கவிதைத்துறையுள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகள் பலவும் நுழைந்தன.
அவை கவிதைப் பயிரை வளர்க்காமல் மேய்ந்தன.
தமிழ்த்துறையின் தலைமைகொண்ட கவிதையுள் காலவைக்க,
தகைமைகள் ஏதும் தேவையில்லை என்ற பிரசாரத்தால்,
இயல்பாற்றல் மிக்க இளையோர் பலருங்கூட
கற்காமல் கவியாக்க முனைகின்றார்.
அவர்தம் அத்தகு முயற்சிகள் கானல்நீராய்க் கரைந்துபோக,
கவிதா விலாசத்துள் அவர்தம் விலாசம் காணாமற்போயிற்று.
வீரிய விதைகள் சில முளையிலேயே முடங்கின.

☯ ☯ ☯

செல்வி லுணுகலை-ஸ்ரீ அவர்களின் கவியாக்கம் கண்டேன்.
முன்னுரை கேட்டு வந்திருந்தார்.
அன்பு, அறிவு, அடக்கம் அத்தனையும் அவரின் நடைமுறையில்
காணமுடிந்தது.
இப்பண்புகள் கல்வியின் கால்கள்.
தக்கபாத்தியில் தக்கபடி பயிரிடப்பட்டிருந்தால்,
விருட்சமாயிருந்திருக்க வேண்டிய வித்து.
கவித்துவம் அவர் கைவசம் உண்டு.
அதைக் கவிதைகள் சொல்கின்றன.
தன் இயல்பாற்றலை மட்டுமே நம்பி கவியாத்திருக்கிறார்.
அவர் இளமைக்கு இவை ஏற்றமே.
எனினும் ஈழத்துக் கவிஞர் வரிசையில் இடம்பிடிக்க,
அவர் தன்னை இன்னும் செம்மைசெய்ய வேண்டியிருக்கிறது.
உளியும் கல்லும் மாத்திரம் சிற்பம் செய்யப் போதுமானவையல்ல.
சிற்பசாஸ்திரமும் கற்றல் அவசியம்.
வெறுங் கைவண்ணம்கொண்டே செதுக்க முடிகிறது.
நுட்பங்கள் தெரிந்தால் நுண்மான் நுழைபுலம் பயனுறும்.
தன்னை எவரும் ஊக்குவிக்காத கதை சொன்னார்.
அது எங்கள் தேசத்தின் சாபக்கேடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலுள்ளோரை அரங்கேற்ற ஆட்களில்லை.
உயர்த்துவிக்காவிட்டாலும் ஊக்குவிக்கவுமா முடியாது?
மரமனிதர்கள்.
ஆனாலும் லுணுகலை- ஸ்ரீக்கு காலம் இன்னும் நிறைய இருக்கிறது.
இயல்பாற்றல் நிறைந்த இவருக்கு,
கவிதைக்கடலுள் கால் வைப்பது ஒன்றும் கடினமல்ல.
முயல்வாராக!
இம்மொட்டு போதாகி மலரட்டும்!!
தமிழ்த்தாயின் காலில் இன்னொரு கவிமலர் சேரட்டும் !!

☯ ☯ ☯

சமர்ப்பணத்திலேயே,
குருவின்றி உருவான கதை சொல்கிறார்.
தன் கவிதைக் கரு சிறக்க,
இறையருள் வேண்டிநிற்கும் இச்சிறுமியின் ஏக்கம்,
என் இதயத்தில் ஏற்படுத்திய தாக்கமே முன் விரிந்தவை.
ஆர்வமாய், ஆண்டவன் கரம்பிடித்து,
கவியாக்க நினைக்கும் இத்தோழியின் துணைக்கு,
ஒரு குரு வாய்த்திருந்தால்,
இவள் தடமும் நம் தமிழ்ப்பாதையில் ஆழப் பதிந்திருக்கும்!

☯ ☯ ☯

யாசிக்கின்றேன் என தன் தந்தைக்காய்,
செல்வி யாத்த கவிதை
அன்பின் ஊற்றை தன்னுள் அடைத்துக் கிடக்கிறது.
சொற்களை மீறி,
அவர் சொல்லவரும் அன்பின் அருமை உணர்கிறோம்.
**உவமையிலா நேசம்,**
**ஒற்றைப் புனிதன்,**
**இறக்காமல் எய்திய சொர்க்கம்,**
**சுக சொத்து,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் அவர் வடிக்கும் வார்த்தைகளில்,
கவிதை தொனிக்கிறது.
தனக்காக தந்தை பட்ட சங்கடங்கள்,
**அடிநெஞ்சில் அத்வைதமாய் இருக்கும் எனும் அடியில்,**
அவரின் ஆழக் கற்கும் தகுதி தெரிகிறது.

☯ ☯ ☯

**கவிதைகள் எனும் கவிதையில்**
தமிழ்த் தெய்வத்திற்கு,
கவிதையின் பொருளை வஸ்திரமாகவும்,
கவிதையை ஆபரணமாகவும்,
உரைக்கிறார்.
இரண்டுமே பிரிக்கக்கூடிய வெளி அழகுகள்.
பொருளை உள்ளழகாய் உவமையால் உரைத்திருப்பின்,
கவிதைத்தரம் உயர்ந்திருக்கும்.

☯ ☯ ☯

பூக்கள் பற்றிய அவர் கவிதையில்,
**பறித்துக் கொள்ளாமல்,**
**ஸ்பரித்துச் செல்லுங்கள் என்று,**
பூக்களின் வேண்டுதலாய் அவர் அமைத்த வார்த்தைகள்,
அவர் கவிதை நெஞ்சின் கனிவை உரைக்கின்றன.

☯ ☯ ☯

பள்ளிப் பருவத்தைப் போர்க்களமாயும் வசந்தகாலமாயும்,
நிகழ்கால, இறந்தகாலங்களிற் காணும் அவர் பார்வை புதிது,

☯ ☯ ☯



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப் பெண்ணையும், மண்ணையும்,
ஒருமித்து உரைக்கும் கவிதையில்,
இரண்டினதும் இழப்புக்கள் உரைக்கப்படுகின்றன.
இக்கவிதையில்,
மண்ணின் உணர்வு வர,
பேச்சோசையை உத்தியாய்க் கையாள்கிறார்.
**பணச் சிக்கலை லண்டன் மகன் தீர்க்கிறான்.**
**மனச் சிக்கலை எவன் தீர்ப்பான்? எனும்,**
இறுதிக்கேள்வி நெஞ்சைச் சுடுகிறது.

☯ ☯ ☯

கம்பன் கவிதை வரியுடன் ஒப்பிடப்படும் மழலைச் சொல்,
இரசனையான ஒப்பீடு.
**புரிவது ரொம்ப கடுமைதான்**
**கொஞ்சம் பொறுமை பூண்டு**
**வார்த்தை பகுத்து பார்த்தால்...**
**இறுதியில் இருக்கும்**
**நெல்லிக் கனி இனிப்பு போலவே**
**இந்த வம்பன் கவி பொருளும்**
மரபுக்கவிதையின் நுட்பத்தை.
கவிஞர் உணர்ந்த மாண்பறிந்து மகிழ்கிறேன்.
நெல்லிக்கனி இனிப்பு உவமை சாலப்பொருத்தம்.

☯ ☯ ☯

இசை பற்றிய கவிதை கவிஞரின்,
பொருட்தேர்வின் நுண்மைக்கோர் சான்று.
செவிப்பொறி பலருக்கும் முழுதாய்த் திறப்பதில்லை.
இசையை இனங்காண்பார்,
நுண்பூதமாகிய ஆகாயத்தை இனங்காண்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தை இனங்காண்பார் ஆண்டவனை இனங்காண்பார்,
அவ் இசையை இறப்பிலும் பிரியாத வரம்வேண்டி நிற்கும் கவிஞர்,
அறிவுலகில் முயன்றால் இன்னும் ஆழக்கால் பதிக்கலாம்.

☯ ☯ ☯

***நடிகர் திலகம்,***
*கற்பனை அற்புதம்*

☯ ☯ ☯

***மோட்ச முழக்கம்***
*குழந்தை பெற்ற அனாதைத்தாயின் குதூகலம்.*
***வயிறு வானம் உடைத்து வந்த,***
***சிறகில்லாத சின்னத் தேவதையே!***
*கவித்துவ வரிகள்.*
***வடக்குக் கிழக்குத் தீர்வுபோல,***
***இடக்குப் பண்ணாதே!***
*ரசிப்புக்குரிய யதார்த்த உவமை.*

☯ ☯ ☯

*தோட்டத் தொழிலாளியின் துயரம் பேசும்,*
***இந்த ஓர் நாளே ஒவ்வொரு நாளும்***
*கவிதைத் தரம் சொல்லும்படியாய் இல்லாவிட்டாலும்,*
*ஏ.சி. அறையை,*
***பொய்க்குளிர்*** *அறையாய்ச் சொல்லியிருப்பது,*
*புதுப்பிரயோகம்.*

☯ ☯ ☯

***சில ?கள்,***
*வித்தியாசமான கவிதைத்துணுக்குகள்*
*செருப்பிடம் கேள்வி புதியகற்பனை.*

☯ ☯ ☯



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாவர ஸ்நேகம்**
பொருட்புதுமை கவிஞரின் தரம் உயர்த்துகிறது.
கவிதை முடிவில் வரும்,
கோபுர தாவர எதுகைகள்,
ஓசையின்பம் ஊட்டுகின்றன.

☯ ☯ ☯

**இரகசியத் தேர்வு, மெய்ப்பொருள்**
காதல் இதயத்தின் கனிவுப் பதிவுகள்.
**உன் வரவுக்காக,**
**தாண்டவமாடும் தடுமாற்றத்தோடு**
**காலச்சிலுவை சுமந்து நான்.**
அனுபவ வரிகள்.
**வல்லரசுகள் வறிய நாடுகள் மீது படையெடுப்பது போல,**
**சோற்றுக்கேங்கும் சோமாலியக் குழந்தை போல ஏக்கத்தோடு நோக்குவது,**
யதார்த்த உவமைகள் இரசிப்புக்குரியவை.
**மெய்ப்பொருள்** எனும் தலைப்பும் அங்ஙனமே.
இளமை எவரையும் கவிஞராக்கும்.
இவரை ஆக்கியதில் வியப்பென்ன?
இவை பருவம் பாடும் கவிதைகள்.

☯ ☯ ☯

இவை ஒரு சோற்றுப் பதங்கள்.
முழுக்கவிதைகளையும் மூழ்கி ஆராயின் முன்னுரை வரைவின்றி விரியும்.
விரிவஞ்சி இந்தளவில் விடுகிறேன்.
மொத்தத்தில் லுணுகலைஸ்ரீயின் கவிதைகளில்,
ஆங்காங்கு கவிதைத் தகுதிகள் விரவிப் பதிவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பில் ஒருமித்த ஒழுங்கில்லாதது குறையே.
ஆஞ்சநேயர், முன்னேஸ்வரம் போன்ற கவிதைகள்,
கருத்தொருங்கில் துருத்தி நிற்கின்றன.
இத்தொகுப்பில் அவை தவிர்த்திருக்கலாம்.
துணுக்குக் கவிதைகள் இன்னும் செதுக்கப்பட வேண்டியவை.
மகாகவிகளின் முன்னைக் கவிதைகளுள் மூழ்கிப் பழகினால்,
இன்னும் உயரலாம்!
வித்திருக்கிறது.
விருட்சமாக்க இன்னும் முயல வேண்டும்.
இது முதல் முனைப்பு.
வாழ்த்துவோம்!
முழு முனைப்புக்குக் கவிஞர் தொடர்ந்து முயல்வாராக!

கம்பன் கழகம்,
இல. 11 ஸ்ரீ இராமகிருஷ்ணன் தோட்டம்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்நூல்.. என் முதல் தொகுப்பு; முதல் முனைப்பு; தமிழுலகத்திற்கு கவிதை பக்கத்தில் நான் இட்ட பிள்ளையார் சுழி.

என் சரிதம் சொல்லும் சமர்ப்பணம், ஒரு *'L' Board* போல - பின்னே குறைகள் வருமிடத்து, அதற்கான என் பூர்வீக காரணத்தை சுட்டி வக்காலத்து வாங்கும் வரிகள் அவை.

இதில் :- கற்பனை முலாம் இல்லாத நிஜங்களும் உண்டு
ஒப்பனை போட்டுக் கொண்ட கற்பனைகளும் உண்டு.

பெண்கள் சார்ந்த சில அமங்கல சொற்களை கவனத்துடன் களைத்திருக்கிறேன்.

அநேக கவிதைகளில், இறுதியில் ஒரு சின்ன தத்துவத்தை ஒளித்து வைத்துள்ளேன்.

சில நிதர்சனங்களை தவிர, கற்பனையில் எந்த விழுமியங்களையும் வீழ்த்தாது, மீறாது வெல்ல முனைந்திருக்கிறேன்.

பெரும்பாலும் பொருட்குற்றம் புலப்படாதிருக்க போராடி இருக்கிறேன்.

இவை எல்லாவற்றையும் காட்டிலும் முன்னுரைக்காக மிகப்பெரிய சிகரங்கள் இருவரை தெரிந்திருக்கிறேன்.

பொய்யிற்கு புகழாமல், மெய்யிற்கு இகழாமல் உள்ளதை உள்ளபடி உரைக்கும் இரு தூயவர்கள்; அதி சிறந்த அனுபவஸ்தர்கள்.

எனது குறைகளை, பிழைகளை பழிக்காமல், எனக்கு வலிக்காமல் உணர்த்தியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரையை விட எனக்கு அறிவுரைகளை அதிகமாக வழங்கியவர்கள்.

பெருமைக்குரிய பேராசிரியர் திரு.கார்த்திகேசு சிவத்தம்பி ஐயா அவர்களும், மரியாதைக்குரிய திருமிகு. கம்பவாரிதி ஜெயராஜ் ஐயா அவர்களும்,

மன்னன் மடியில் வளரக் கிடைத்த ஓர் அநாதை குழந்தை பெற்ற பெரும் அதிஷ்டம் போல, எனக்கு இவர்கள் மூலம் கிடைத்த அன்பும், ஆதரவும், உறவும் மிகப்பெரிய அங்கீகாரமும், அந்தஸ்தும் ஆகும்.

எத்தனையோ நிகழ்ச்சிகள், பயணங்கள், வேலைப் பளுக்கள் இத்தனைக்கும் மத்தியிலும் எனக்காக தன் காலம் விரயம் செய்து அதிசிறந்த முன்னுரை வழங்கிய பேராசிரியர் அவர்களுக்கும், திருமிகு. கம்பவாரிதி ஐயா அவர்களுக்கும் பாதம் தொட்டு நன்றிகளை வழங்குவதில் பெருமை கொள்கிறேன். எஞ்ஞான்றும் இந்நன்றிதனை நான் மறவேன்.

என் பிள்ளை முயற்சியால், தான் தோன்றிய எண்ணங்களை கவிதை தொகுப்பாக உங்கள் முன் மும்மொழிகிறேன்.;

வழி மொழிந்தாலும், பழி மொழிந்தாலும் எனக்கின்பமே! இவ்விரண்டும் என் வளர்ச்சிக்கு சாதகமே!

நம்பிக்கையுடன்,
**லுணுகலை - ஸ்ரீ**

*இல. 31/1, லுணுகல கம,*
*லுணுகலை,*
*பதுளை.*
*தொ. பே. இல : 060 2553272*
மின்னஞ்சல் : lunugalasri@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | |
|---|---|---|
| ❧ | யாசிக்கின்றேன் | 01 |
| ❧ | கவிதைகள் / பூக்கள் | 03 |
| ❧ | ஹரே ஆஞ்சநேயா | 04 |
| ❧ | நீயே எனக்கு | 06 |
| ❧ | பள்ளிப் பருவம் / கிராமம் | 08 |
| ❧ | யாழ்(பெ)பண்(டே)ணாசை | 09 |
| ❧ | மழலை / உண்டியலும் தபால் பெட்டியும் | 11 |
| ❧ | மடிந்தாலும் மகிழ்ச்சியே | 12 |
| ❧ | எனை இயக்கும் விசை | 14 |
| ❧ | ஏன் கண்ணா? / நடிகர் திலகம் | 16 |
| ❧ | முன்னேஸ்வரம் | 17 |
| ❧ | நாய் / குழந்தை தொழிலாளர்களே...! | 19 |
| ❧ | ஸ்தம்பித்து நின்றேன் | 20 |
| ❧ | மோட்ச முழக்கம் | 22 |
| ❧ | நிரந்தரத் தோல்வி | 24 |
| ❧ | இந்த ஒர் நாளே ஒவ்வொரு நாளும் | 25 |
| ❧ | 03.12.1995 / அரசியல் | 27 |
| ❧ | வாடிக்கை | 28 |
| ❧ | சில....? கள் | 29 |
| ❧ | ஆதங்கம் | 30 |
| ❧ | பெப்ரவரி 04 / வெண்புறாவே | 32 |
| ❧ | கலங்காது பொறுத்திரு நெஞ்சமே | 33 |
| ❧ | இராவணா | 35 |
| ❧ | பலமான பலவீனம் | 37 |
| ❧ | என் பேனையே... | 39 |
| ❧ | நட்போடு த(வி)ர்க்கிறேன் | 40 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ❧ | இன்பம் | 42 |
| ❧ | வேண்டாம் இந்தக் கொடுமை வேறு எவருக்கும் | 43 |
| ❧ | மதங்களுக்கு இல்லை மரணம் | 45 |
| ❧ | ஒசாமா | 47 |
| ❧ | தாவர ஸ்நேகம் | 48 |
| ❧ | நானும் காத்திருக்கிறேன் | 50 |
| ❧ | தொழில் / போதை | 52 |
| ❧ | ரகசியக் தேர்வு | 53 |
| ❧ | யதார்த்தம் / அறிவிப்பு | 55 |
| ❧ | சொல்லுங்கள் அப்பா | 56 |
| ❧ | மே தினம் | 58 |
| ❧ | வார்த்தை வறுமை | 60 |
| ❧ | சமாதானப் பேச்சு... | 61 |
| ❧ | மெய்ப்பொருள் | 62 |
| ❧ | ஊமை அதிர்வு | 64 |
| ❧ | அவசர அழைப்பு | 65 |
| ❧ | வேண்டாம் வாரிதியே | 67 |
| ❧ | ஒளித்திருக்கலாம் அன்பே | 69 |
| ❧ | ஹைக்கூ | 71 |
| ❧ | கொழும்பு | 73 |
| ❧ | இயற்கை உபதேசம் | 76 |
| ❧ | நேர்கோடு | 77 |
| ❧ | வெண்ணிலாவின் பொன் பொழுது | 79 |
| ❧ | தயவுசெய்து இயம்பு | 81 |
| ❧ | எனக்கே தெரியாமல் | 83 |
| ❧ | கனவிலாவது மெய்ப்படவேண்டும் | 85 |
| ❧ | முது மொழியின் புதுப்பொருள்/ கதிரை | 87 |
| ❧ | பரீட்சை & பிரசவம் | 88 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசிக்கின்றேன்.!

எனக்கென வாழும்
ஏகாந்த உறவே - ''என்
உயிர் வதியுமிடம் நீ'' என
எனை நவிலும் - எந்தன்
உன்னதமே!

உன் நேசத்தின்
நீள அகல ஆழம் சொல்ல
உவமை ஒன்றை - இந்த
உலகில் கண்டறியவில்லை
நான் இன்று வரையில்....!

நான் சுகிக்க - நீ
சந்தித்த சங்கடங்கள் - என்
உயிர் வற்றும் வரைக்கும்
அடி நெஞ்சில்
அத்வைதமாய் இருக்கும்!

என் உயிர் தோழன் யார் என்றால்,
என் குலதெய்வம் யாதென்றால்
என் உதிரமெல்லாம் - என்றும்
உன்னை மட்டுமே உரைக்கும்!

நானறிந்த ஒற்றை புனிதனே....
உனை பாட எனக்கு
ஓர் கவி போதாது;
ஓர் ஆயிரம் நூல் வடித்தாலும்
எனக்கது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா - பிதா - குரு - தெய்வம் என
அன்று கற்றேன் பள்ளியிலே
மாதா-குரு-தெய்வம் இம்மூன்றையும்
நான் கண்டதோ என் பிதா உன்னிலே!

பூர்வ ஜென்மத்தில் நான் செய்த
புண்ணியத்தின் பலனாக
இம்மையில் நான்
இறக்காமல் எய்திய சொர்க்கமே,

உன் கடன் தீர்க்க - என்னால்
இப்பிறப்பால் இயலாது;
இப்பிறப்பொன்றும் போதாது....!

இந்த நேசம் மட்டும்
நான் என்றும் பெற
நீயே எனக்கு
தந்தையாக வேண்டுமென்றும்,

நீ எனக்கு
கொடுத்த சுகச் சொத்தின்
கடன் நான் கழிக்க
உனக்கு நான்
தந்தையாக வேண்டுமென்றும்
தினசரி வேண்டுகிறேன்; - இறைவன்
குழம்பிப் போவானோ? - இதில்
எதை எனக்கு
கொடுத்து போவானோ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்

தமிழ் தெய்வத்திற்கு
அபிசேக வஸ்த்திரம் - அதன்
அர்த்தங்கள் :
அலங்கார ஆபரணம்
கவிதைகள் !

## பூக்கள்

பறித்து கொல்லாமல்
பார்வையால் மட்டும்
ஸ்பரித்து செல்லுங்கள்
மென்மை தேகமும்
வெள்ளை சிரிப்பும் கொண்ட
பிள்ளைகள் நாங்களும் தான்.

*30.05.2004*
*மித்திரன் வாரமலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரே ஆஞ்சநேயா...!

ஹரே ஆஞ்சநேயா ...
இன்னொரு முறை - நீ
இலங்கை வர மாட்டாயா?

வந்தால் தவறாமல்
வாலில் தீயின்றி - சஞ்சீவி
மலையை மட்டும்
ஏந்தி வா ஆஞ்சநேயா .....

மறந்திடாமல் அதில்
மிருத சஞ்சீவினியை
மிகையாக கொண்டு வா

வாழாமல் செத்து போன
செம்மணி கண்மணிகளை
பிழைப்பூட்டுவோம்
பிறப்பின் பொருள்
போரல்ல என்று போதிப்போம் !

தொடர்பிழந்த உடலுறுப்புக்களை
ஒட்ட வைக்கும் சித்தாம்
சந்தான காரணியையும்
சேர்த்தெடுத்து வா - வாழ்வோடு
ஒத்தி வைக்கப்பட்டுள்ள
முக்கிய உறுப்பாம்
மனித நேயத்தை - சேர்த்து
ஒட்டி வைப்போம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசல்ய கரணியை - கொஞ்சம்
விசாலமாக எடுத்து வா
ஒவ்வொரு உடலிலும் பாய்ந்துள்ள
இனவெறி ஈட்டி முனைகளை
இல்லாமல் செய்திடுவோம் ......!

வடுக்களின் தடமழிக்கும்
வல்லமை வாய்ந்த - அந்த
சாவர்ண கரணியையும்
சற்று அதிகம் தாங்கி வா,

ஐம்பாவ நினைவு வடுக்கள்
அனைவருக்கும் அற்று போக
அதனை இடுவோம் !

புனிதம் தாங்கி இலங்கை
புனர் ஜென்மம் பெறட்டும்
புனித ஜோதி இங்கிருந்து
பூலோகம் எங்கும் பரவட்டும் .....!

*16.06.2006*
*Metro News*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயே எனக்கு

துறவுபோல் வாழ்ந்த வாழ்வை
துறக்க வைத்து - என்
வாழ்வில் உறவெனும் திருப்புமுனையை
உருவாக்கிய உன்னதமே!

தனிமை காட்டுக்குள்
மீண்டும் எனை - தனியே
தவிக்க விட்டு - என்னை
தவிர்த்து விட்டு போவது
தகுமா உனக்கு....?

இது குறித்து
சத்தமின்றிய பெரும்
யுத்த காண்டம் ஒன்று
நித்தமும் நர்த்தனமாடுகிறது - என்
சித்தத்தினுள் இங்கு! - இதை
யாரிடமும் சொல்ல முடியவில்லை; அல்லது
சொல்லத் தெரியவில்லை எந்தனுக்கு!

எல்லை மீறிய எந்தன் மௌனம்
பலமா? பலவீனமா என்பது
பற்றியும் தெளிவில்லை.

இத்தனை நாள் வாழப்படாமல்
வாழ்ந்த வாழ்க்கைதான் முறையா?
இல்லை 'இனி உன்னோடு'
உனைப்போல வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசிக்கும் இந்த
உறவு நெறி பிழையா...?
பகுத்தறிந்து தெளியும்
பக்குவமும் கிட்டவில்லை.

நான் அவசரப்பட்டது அதிகமா?
அல்லது எனக்கு
அறியாமை தான் அதிகமா?
எதை எண்ணிப் பார்த்தாலும் - இறுதியில்
எஞ்சும் விடைகுறிக்கு
விடை சொல்லத் தெரியாது

விம்மும் என்னிதயத்திற்கு - நான்
விடை என்ன கூறுவது?
நீயே எனக்கு
வினாக் குறியாய்
ஆன பிறகு......!

*23.06.2002*
*மித்திரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி பருவம்

கடக்கும் வரைக்கும்
இது தான் போர்க்களம்!
கடந்து முடிந்து
திரும்பிப் பார்த்தால்
இதுவன்றோ வாழ்வின்
வசந்த காலம்....?



# கிராமம்

அமைதியின் வாசஸ்தலம்; - இயற்கை
அழகின் ஒட்டு மொத்த இருப்பிடம்
சத்தழியா உண(ர்)வும்
சுத்தமான காற்றும் காதலும் - இன்னும்
செத்துப் போகாமல்
குடி இருக்கும்
குட்டி சொர்க்கம்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.(ஏ)பண்(ரே)ணாசை

முப்பது வருஷத்துக்கு முன்னம்
எப்படி நிண்ட யாழ். - இன்டைக்கு
என்னை போலவே - அதுவும்
பொலிவிழந்து, திரிபடைந்து
நிற்குது

இளமை இழக்கும் முன்னே - என்ட
தலைவன் இழந்தேன்
தாலி அறுத்தேன்; - கொப்பர்
கொடுத்த சொத்தெல்லாம் - யுத்த
அரக்கனுக்கு கொடுத்தேன் !

பெற்ற ஆறு பிள்ளைகளில்
மூன்டு என்ன ஆச்சுதோ...?
மூண்ட யுத்தத்தில் அவையல் உயிர்
முடிஞ்சு போச்சுதோ? - அன்றில்
ஏதேனும் ஒரு மூலையில்
எங்கேனும் ஓர் முகாமில்
என்னை நினைச்சு இருக்கினமோ...?

பெட்டையை கொழும்புக்கு
கட்டிக் கொடுத்து
போன வாரம்
போனேன் பார்க்க....

தட்டிய கதவின்
தாழ் திறக்கும் முன்
எச்சரிக்கையாய் ஒரு கணம்
ஜன்னலின் வழியே
எட்டியே பார்த்திட்டு
தாழ் திறந்தவள்
முகம் பார்த்து - நானும்
தவிச்சு போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமங்கலி பெட்டை - நெற்றி
பொட்டின்றி, பூவின்றி
குட்டை சட்டையில் நிற்க
''உது என்னடி அபச்சாரம்!''
எண்டு நான் கேட்க

''இந்த வேசம் தான் அம்மா
இங்கு எமக்கு சாதகம் - தமிழ்
வடுவிருந்தால் எப்போதும்
வரலாம் பாதகம்''
என்றாள் என் பெட்டை - ஊர்
பேச்சை கூட தவிர்த்து .....

வன்னி கன்னி வெடி மயம்
வவுனியா ஷெல் விழும் பயம்
திருமலையில் குண்டு மழை
கிழக்கிலும் இதே நிலை - என்று
ஒவ்வொரு தேசத்திற்கும்
ஓடி ஓடி புலம் பெயர்ந்து
பட்ட துயர் போதுமென்று
தலைநகருக்கு அனுப்பினால் - அதன்
தலைவிதி உப்படியெண்டால்.....

நாம் எங்கு போவது...?
தமிழராய் பிறந்தது - மகா
தப்பா? பாவமா...?
சீரழியும் எம் வாழ்வு
சீராகுவது என்டைக்கு? என்று
ஏங்கிய படியே திரும்பினேன்
கன்னி வெடியால் காலிழந்த - என்ட
கடை மகனை நோக்கி .....

பணச் சிக்கலை - லண்டன்
போன மகன் தீர்க்கிறான்; எம்
(இ)மனச் சிக்கலை - எவன்
என்று தீர்ப்பான்.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலை .....

கம்பன் வரிகளில்
கண்ணாம் பூச்சு ஆடும்
பொருள் போலவே
புரிவது ரொம்ப கடுமை தான்
கொஞ்சம் பொறுமை பூண்டு
வார்த்தை பகுத்து பார்த்தால்....
இறுதியில் இருக்கும் - நெல்லி
கனி இனிப்பு போலவே - இந்த
வம்பன் கவி பொருளும்
உங்கள் உளறல்களும் .....

## உண்டியலும் தபால் பெட்டியும்

வாய் மூடாமல்
உரு ஒற்றுமை கொண்ட
உண்டியலும் அஞ்சல் பெட்டியும்
குண ஒற்றுமையிலும் - இன்று
ஒருமித்து போயின!

இரு பெட்டிகளிலும்
இடும் காசும் கடிதமும்
சேரும் வரை காத்திருந்து
எப்போதோ ஓர் நாள்தான்
எடுக்கப்படுகிறது.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடிந்தாலும் மகிழ்ச்சியே...!

கரு கொண்ட காதலை
கலைத்து கலைத்து
களைத்துப் போனேன்!

உன்னை அணுக
அனுமதிக்காத அறிவும்
உன்னிடமிருந்து
விலக மறுத்த அன்பும்
நடாத்திய
பட்டிமன்ற சர்ச்சையில்
அன்பு ஜெயிக்க கண்டேன்!

உன்னையும் என்னையுமன்றி
உன் நெஞ்சின் காதலையன்றி
மற்றனைத்தையும்
மறந்து தொலைத்தேன்!

மஞ்சள் குங்குமம் அன்றி
மாங்கல்ய பாக்கியமின்றி
உன்னோடு வாழ்ந்திட
உத்தேசித்து முடித்தேன்!

கலாசாரம் என் மீது
காறி உமிழ்ந்து கண்டிக்கலாம்
மனச்சாட்சி நொடிக்கொரு முறை
உறுத்தலை உருவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருஷேத்திரம் நிகழ்த்தலாம்
துயர் தாங்கவும் துணிந்தேன்!

முடியாமல் போயின்
மறு நொடியே
மறந்தாலும் மகிழ்ச்சியே
என்பேன்!

ஓர் நாளேனும்
உனக்கு மனைவியாய்
உன்னோடு வாழ்ந்திட்ட
திருப்தியில் என் ஆன்மா
அடையுமே அமைதி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை இயக்கும் விசை...!

மலையை துளைத்து பயணிக்கும்
ரயிலை போலவே - என்
மனதை துளைத்து வெளியேறும்
பரகசியமான ரகசிய அதிசயமே.....

ஒவ்வொரு நொடியும் - எனை
ஆட் கொண்டு, ஆக்கிரமித்து - எனை
அறியாமல் எனக்குள் ஊடுருவி
இனிக்கும் இம்சையே....

நீ என்ன போதையா? - உனக்கு
அடிமையாகி - உன் பிடியிலிருந்து
விடுபட முடியாமல் கள்ளுண்ட வண்டாய்
உன்னிடம் கிறங்கி கிடக்கின்றேனே....?

நீ என்ன சிறையா? - உனக்குள்
கைதியாகி - எனக்குள் எனை
தொலைத்துக் கொள்கின்றேனே !

இது என்ன அதிசயம்? - உன்
ஒரே ஓர் அவதாரம் மட்டுமே - என்
பசிக்கு விருந்தாய்,
வலிக்கு மருந்தாய் - கோபக்
கனலை அணைக்கும்
குளிர்ந்த நீராய் இருந்து
பரிகாரம் பண்ணுகிறதே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனை மறந்து எங்ஙனம் - நான்
உயிர் துறப்பேனோ! - என
எண்ணும் தருணம் தான்
மரணம் நினைத்து நான்
மனம் வருந்துகிறேன்!

இதனால் உன் உயிலில்
இறைஞ்சுகின்றேன் - என்
கல்லறையிலும் உனை என்னோடு
கலந்திருக்க இடமளிக்க வேண்டுமென்றும்
கடவுளிடம் கேட்கின்றேன்
இறந்தாலும் எனக்கு
செவிப்புலனை கொடு என்றும்
அடுத்தோர் ஜென்மத்தில் - எனை
அ.்.றிணையாய் படைப்பாயானால்
அசுணமாய் ஜனிக்க சபி என்றும்

எனை இயக்கும் விசையே
என் காதல் இசையே.....
உன்னிடம் யாசிக்கின்றேன்
என்றும் என்னோடு - நீயும்
இசைந்திரு என்றும்.

*23.02.2003*

*மித்திரன் வாரமலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் கண்ணா ...?

"அதர்மம் தாண்டவமாடும் போதெல்லாம்
அங்கு நான் அவதரிப்பேன்" என்ற
பரந்தாமா! எம் நாட்டு
பாராளுமன்றத்தில் மட்டும் ஏன்
இன்னும் நீ அவதரிக்கவில்லை ?
வாக்குறுதியை நிறைவேற்றாததால்
நீ கூட அரசியல் வாதியே...?

*30.07.2004*
*Metro News*

## நடிகர் திலகம்

பிரம்மாவுக்கு அப்படி என்னவோ
விபரீத ஆசை?
தன் தேவி கலைமகளை
ஆணாக படைத்து பார்க்க
பூலோகத்தில் .......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேஸ்வரம்

*முன்னை நாதனை தரிசிக்க எண்ணில்லா கனவுகளோடு சென்றேன் எல்லையில்லா கவலைகளோடு திரும்பினேன் அந்த கண்ணீரின் ஒரு துளி இந்த கவிதையாய் பரிணமித்தது.*

*08.08.2004*

பஞ்ச ஈஸ்வரங்களில் - அகவை
ஆயிரம் மூன்றை முடித்த
பழைமையானதும் பெருமையானதுமான
ஈஸ்வரமும் இது தான் - இன்று
தமிழ் பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும்
பஞ்சம் ஏற்பட்டுள்ளதுமான
ஈஸ்வரமும் இது தான்!

சுத்தம் செய்யா சுவரை - சிங்கள
சத்தம் தரும் வாத்தியங்களை
ராவணன் கண்டால்
ரணப்பட்டு சாவானோ? - தனித்தே
வனம் நின்ற - ஜனகன்
மகளைப் போல - தரையோடு
பெயர்த்தெடுத்து போவானோ...?

தப்போடு சிங்கள சங்கும் - சிவனுக்கு
தம்பாசையில் ஒலிப்பது
தப்பாக தெரியவில்லையா? - இது
மத்தாக நெஞ்சை
கடைந்தெடுக்கவில்லையா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித தலம், புராதன தலம்,
ஆடல் கொண்டோன்
பாடல் பெற்ற தலம் - இன்று வெறும்
காண்போர் கூடமாக
கையாளப்படுவதை சற்றும்
கண்டிக்க தோன்றவில்லையா...?

சிலாபம் வாழ் தமிழ் வாசிகளே...
இதைப் பார்த்து எப்படி - உம்மால்
இலகுவாக இருக்க இயல்கிறது...?

சிருஷ்டிக்கத்தான் தெரியவில்லை;
செய்து தந்த இந்த சொர்க்கத்தை
காப்பாற்ற கூடவா முடியவில்லை?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்

அனுமதிக்க முடியவில்லை
அனுமானிக்கவும் இயலவில்லை
எஜமான் - எதிரி
யார் என்ற வேறுபாட்டை
சரியாக பகுத்தறியும் உன்னை
ஐந்தறிவு கொண்ட
அ.்.றிணை என்றுரைப்பதை .....

*20.10.2002*
*மித்திரன் வாரமலர்*



## குழந்தை தொழிலாளர்களே...

சின்ன மொட்டுக்களே....
சிரிக்கும் பூக்களே....
உங்கள் எஜமானுக்கும் என்ன
அத்தனை பெரிய
வறுமையா வந்துவிட்டது?
மனச் சாட்சியை
ஈடுவைக்கும் அளவிற்கு !

*21.07.2002*
*மித்திரன் வாரமலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தம்பித்து நின்றேன்

வேலைக்கு விண்ணப்பித்து
வெற்றிக் கொண்ட - ஓர்
ஏழை பட்டதாரிக்கு
ஏற்படும் எல்லையில்லா
ஆனந்தம் போல்
உனை கண்டு - என்
உயிர் முதல் - அத்தனை
துளி ரத்தமும் சந்தோஷ
எல்லையின்
விளிம்பு தொட்டு
துள்ளி குதித்தாடியது!

கால்கள் சிறகு கட்டி
கண்கள் ஒளி பூட்டி
வந்த உனை கட்டியணைத்து
வரவேற்க நுரைக்க நுரைக்க
ஓடி வந்து - திசையெங்கும்
தேடிப் பார்த்த போது......

பரவசத்துடன் ஓடி வரும்
பாற்கடல் அலை
பாறையில் மோதுண்டு - இறுதியில்
பல லட்ச சில்லுகளால்
சிதறிப் போவது போல
நீ இல்லாத
நிலை கண்டு - என்
இதய முட்டை மேல் - ஏமாற்ற
இடி விழுந்து
நொருங்கிப் போனது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகணம் உண்மை ஒன்று
உறைத்திடவே
ஸ்தம்பித்து நின்றேன்!

உன்னை மட்டுமே என்னிதயம்
ஒளிப்பதிவு செய்து கொண்டதன்
விளைவாக - நீ
கனவில் வந்ததை - நான்
வெளியில் தேடிய - என்
வேடிக்கையை பார்த்து

கேலி செய்த
தனிமையின் முன்
குற்றவாளி கூண்டில் நிற்கும் - ஓர்
அப்பாவி நிரபராதி போலவும்
அதே வேளை....

பைத்தியக்கார தனத்திற்கும்
பரிதாபத்துக்குரிய ஜீவனாகவும்
என்னை நானே
பதிவு செய்து கொண்டு
ஸ்தம்பித்து நின்றேன்.

*21.07.2002*

*மித்திரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ச முழக்கம்

நீ எனக்கு
கிடைத்த பிறகு தான்
அநாதை என்ற எனது
அடையாளத்தை நான்
அழித்துக் கொண்டேன்!

அடுத்த நொடியைப் பற்றி
அணு அளவேனும்
அக்கறை அற்ற நான் - இன்று
அறிவு அழித்து
ஆயிரம் ஆண்டு திட்டத்தை
ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறேன்.

நீ என்னை
நினைக்கும் பொழுதென
தும்மும் நேரத்தையெல்லாம் - தேதியோடு
துல்லியமாய் குறித்து வைத்து
குதூகலிக்கின்றேன் !

எனை போல
உனை காக்க - அந்த
ஐம்பூதங்களுக்கு கூட
அவ்வளவு முடியாதென்று - என்
ஆவியில் பாதியை - உன்னோடு
எப்போதும் உடனிருக்க - தினம்
ஆண்டவனிடம் அருள் கேட்கிறேன் !
உனை காணும் கணமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிப் பயனையே - நான்
பெற்று விட்டதாய்
பிரகடனப்படுத்துகிறேன்....!

வடக்கு - கிழக்கு தீர்வு போல
இடக்கு பண்ணாதே ! - என் செல்லமே
முரட்டு குணம் கொள்ளாதே - என்
வயிறு வானம் உடைத்து வந்த
சிறகு இல்லாத சின்ன தேவதையே.....

உன் கண்ணில் நீர் வடிந்தால்
என் நெஞ்சில் உதிரம் அல்ல
உயிரே கொட்டி போகிறது....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர தோல்வி

அணு துளைத்து
வான் கிழித்த விஞ்ஞானமே....
'ஹார்மோன்களின்
ஆர்ப்பாட்டத்தின் வெளிப்பாடு தான்
காதல்' கூட என்று
வியம்பிய விஞ்ஞானமே....

'கைப்பிடி அளவு இதயம்' - என
கண்டு பிடித்த உம்மால் - ஒரு
அன்பு தாயின் இதயத்தில்
கனக்கும் காதலின் எடையை
கணக்கிட இயந்திரமோ....
கண்டறிய சூத்திரமோ...
உண்டு பண்ண இன்று வரை
இயலாத போது - இனியும்
இயலாது எனும் போது....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஓர் நாளே
# ஒவ்வொரு நாளும்....

எங்க உழைப்பாலே - வாழ்க்கையில்
எங்கேயோ போயிட்ட
எங்க தலைவரே - பொய்
குளிர் அறையில் குடியிருக்கும்
கோமானே....

எங்க பாடு சொல்லி மாளாது
சொன்னாலும் தீராது - ஆனாலும்
சொல்றேன் அதை நீ கேளு....

விடிஞ்சும் விடியாத
வைகறை பொழுது - எங்க
நிகழ் காலத்தை நினைவூட்டுது
அதோட எங்க வாழ்வும்
அன்றாடம் தொடங்குது...!

சிறகில்லாமலே பறந்து
சீக்கிரமே சமைக்க
நீர் குழாய் திறந்தால்
காத்து கூட வராது...

அழுது அடம் பிடிக்கும்
என் புள்ள தூக்கி
புள்ள மடம் போய் விட்டு
ஓடினால் என் மலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை குளிர் என்
அரும்புடலை கிள்ளும்
கெதியாக பகல்வெயில் வந்து
கொடூரமாக கொல்லும்.

முதுகெலும்பு முறிய எடுத்த
கொழுந்து சுமை அளக்கும்
நேரம் அண்மிக்கும் - அப்போது
வயிறு சஹாராவாக பரிணமிக்கும் !

முழுநேர துன்பம் பாரா
'முத்தெலை' என்று முறைப்பாக
அழுதாலும் எடுத்த கொழுந்துக்கு
அரைவாசியே கணக்கிட்டு நெருப்பாக.

வேலை முடிச்சு நானும்
வீடு சென்று தாகம் தீர்க்க
பாலை வன பாத்திரமெடுத்து
பருகுவோம் தேனீர் என்றால்.....

ரெத்தம் சிந்தி பாடுபடும்
எங்களுக்கு நடப்பதோ செப்படி வித்த
நித்தம் எமக்கு தருவதோ
நிராகரிச்க சக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03.12.1995

உள்ளத்தால் ஊனமுற்று
விமோசனம் இன்றி
பிராயச்சித்தம் தேடுபவர்களின்
மத்தியில் - உங்கள்
காயத்தின் குறைபாடு
கடுகளவு நெஞ்சங்களே....
கவலை துறவுங்கள்
விஞ்ஞான வைத்தியத்திடம்
உள்ளது உங்களுக்கான
பரிகாரம்.

*08.12.2002*
*மித்திரன்*
*(03.12.95 சர்வதேச ஊனமுற்றோர் தினம்)*

## அரசியல்

ஆடம்பரமான
சாக்கடை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கை

அனர்த்தம் நேர்ந்த பின்பு
அரசு மறவாமல்
அனுதாபம் தெரிவிப்பதும்......

போன தலைவன்
பண்ணிப் போன குறையை
பாடுவதிலும் தேடுவதிலும்
வந்த தலைவன் காலம்
வற்றி போவதும்.....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில...? கள்

வேடிக்கையா....?
விநோதமா...?
விகாரமா....?
விகடமா.....?
சமாதானத்திற்காக
யுத்தம்....?

சுழன்று கொண்டே இருக்கிறாயே....
ஓய்வெடுக்க தோன்றவில்லையா
பூமியே.....?

ஓராண்டோடு முடிந்து போவதாய்
வருத்தம் வருமா
வருஷங்களே...?

புதிதானாலும் கோயிலுள்ளே
போக முடிவதில்லையே என்று
ஏக்கம் உண்டாகாதா
செருப்புகளே...?

எத்தனை முறை
முத்தமிடுகிறாய்...?
கரையோடு அத்தனை காதலா
அலைகளே...?

அழகு சம்பந்தனுக்கு
பாலூட்டிய பார்வதியே - இந்த
கருணையை இன்று
சோமாலியா வாசிகளுக்கும்
காட்டினால் ஆகாதா....?

பறிக்கும் போதும்
முறைக்காமல் இருக்கின்றீர்களே...
தேகம் வலிக்காதா
பூக்களே....?

மரணமே! - நீ
என்று சாவாய் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதங்கம்

உறவுகளை யாசிக்கும் - ஓர்
ஊமை அநாதை மாதிரி
என்னை எப்போது
ஈழம் நேசிக்கும் என்று
ஏக்கத்தோடு காத்திருக்கிறேன்
இற்றைக்கு வருஷம்
இருபத்து மூன்றை தொட்டு !

என்னோடு மட்டும்
ஏனுமக்கு விவாகரத்து?
சத்தியமாய் புரியவில்லை
சமாதானம் எந்தனுக்கு !

என்னோடு முரண்பட்டு
இதுவரை நீவிர்
பெற்ற பயன் யாதுண்டு ?

உயிர், உறவு, உறுப்பு
உடைமை எல்லாம் இழந்தீர்
பிரஜையாய் இருந்து
அகதியாய் தரம் தாழ்ந்தீர் !

அடக்கமான என்னை முடக்கி
'பேச்சு வார்த்தை' எனும் பேரில்
நாட்டுக்கு நாடு, நாடு கடத்தி
பகடைக்காய் ஆக்கினீர் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டு மந்தைகளுடன் வாழ்ந்ததால்
ஆடு போல சிங்கமும்
ஆனகதை போல - உம்
அநியாயம் கண்டு - தினம்
எனக்குள்ளும் நிகழ்ந்தது - ரகசிய
யுத்த காண்டம் ஒன்று...!

வடக்கு கிழக்கு
வன்னி மக்கள் கண்டு - நானும்
கண்ணீர் வடித்ததுண்டு ;
செம்மணியை பார்த்து பார்த்து - நித்தம்
செத்து செத்து பிழைத்ததுண்டு.

யுத்தத்தின் அறிமுகம்
குருஷேத்திரம் என்றால் - ஈழ
யுத்த அமிலத்தின் நதிமூலம் - அந்த
கபில ஜுலையன்றோ..?

கறுப்பு ஜுலையை வித்திட்ட
நெருப்பு விஷ மாந்தரே - உமது
வினையின் விளைவின் நீளம்
வெள்ளி விழாவை நெருங்குகிறது - இதை
எண்ணி மனம் நொருங்குகிறது....!

நீவிர் இல்லையெனில்
மாவீரர் துயிலும் இடம்
மாவீரர் பயிலும் இடமாகவன்றோ
இருந்திருக்கும் ?

அபிவிருத்தியான நாடென்ற
அந்தஸ்தை இலங்கை என்றோ
அடைந்திருக்கும் !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி - 04

தப்பேதும் புரியாத இலங்கை மாதாவை
யுத்தச் சிறையில் அடைத்து விட்டு
சுத்தச் பொய் கொண்டாட்டம் இன்று
சுதந்திர தினம் இலங்கைக்கு என்று !

*04.02.2001*
*சக்தி F.M.*



# வெண்புறாவே...

சாப வரமல்லவா மனிதன் உனக்கு
சமாதான சின்னம் வழங்கியது...?
வாழப்படாமலே தூர்ந்து போக வைத்த
அவலத்தில் இருந்து மீள
மனிதரில்லா தேசம் தேடி சென்று
சமாதானமாக இளைப்பாறி(டு)ரு....!

*22.08.2004*
*மித்திரன் வாரமலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலங்காது பொறுத்திரு நெஞ்சமே!

கொந்தளிக்கும் உன் இதயத்தின்
அதிர்வை எனக்கு
கொணர்ந்து காட்டியது
கண்ணீர் சொற்களால் வந்த
உந்தன் கடிதம்!

உனக்கு ஆறுதல் கூற
உன்னருகில் நானில்லை; - உன்
கண்ணீரை தொட்டு துடைக்க - என்
கரங்களும் அத்தனை
நீளமில்லை - ஆனாலும்
அவைகளை என் கவிதை
செய்யுமல்லவா....?

காதலின் வெற்றி என்பது
கல்யாணம் ஆவதும் - அன்றில்
இருவரும் கல்லறையாவதும்
மட்டுமல்ல மனமே!

காதலின் வெற்றி என்பது
காலம் பிரித்து வைத்தாலும்
காதலர்கள் இருவரும் - தொடர்ந்து
காதலிப்பதும்,
காதலிக்கப்படுவதுமே
காதலின் வெற்றி நெஞ்சமே!
இலையுதிர் காலத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிர்ந்து கொண்டே தளிரும்
மாமரம் போன்று
பிரிந்திருந்தாலும் உங்கள்
உள்ளம் இரண்டும்
புணர்ந்து தானே உள்ளது தோழா?

கால இராவணனால் - உன்
காதலி சீத்தாவை - உன்னிடமிருந்து
பிரிப்பென்னும் போரில்
கடத்தி வைக்க முடியுமே தவிர
காணாமல் ஆக்கிட முடியாது
கண்ணா!

உங்கள் உறவுக்குள்
உருவாகியுள்ள இந்த
குறுங்கால விரிசல்
கூடிய சீக்கிரமே விலகும்
அப்போது நீவிருக்கு
நித்திய வசந்தத்தை - இதே
காலம் சத்தியமாய் கொணரும்.
அதுவரை - அதற்காக
நம்பிக்கை நசியாது
கலங்காமல் பொறுத்திரு நெஞ்சமே!

*22.02.2004*
*மித்திரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணா....!

இராவணா! - உனை
அரக்கன் என்பதை - நான்
அனுமதிக்க மாட்டேன் - நீயும்
திருவாளன் தான் என்பேன் !

ஆலகண்டன் மீது வைத்த
ஆழமான நேசம் - அதன்பால் நீ
ஈழத்தில் சிருஷ்டித்த
ஈஸ்வர திருத்தலம் - அதில்
செய்து வைத்த சிற்பம்
செம்மை மிகு லிங்கம்
இவை பார்த்தால்
எங்ஙனம் உன்னை
அரக்கன் என்பது ? - நீ
அரக்கன் அல்ல - கலை
அரசன் - அதி சிவ
பக்தன் !

பிறன் மனையாளின் மீது - நீ
பிரியம் கொண்டது பிழையானாலும்
ஆசை வைத்த சீதை
அனுமதி அன்றி - அவனை
அண்மிக்கவில்லையே...!
கவர்ந்து வந்த கன்னிக்கு
காதல் வரும் வரைக்கும்
காத்திருந்தாயே பொறுமை பூண்டு
இவை முன் நீ
அரக்கன் அல்ல
புனிதன்; - அதிசிறந்த
மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரமான குலமும்
விகாரமான உறவும் - உனை
அரக்க வரிசையில்
இருக்க வைத்த போதும் - உன்
குலத்திற்கு மாறாய் - நீ
கொண்ட குணம் புதினம் !

இரவி குலத்தில் உதித்தோரின்
குணத்தை கும்மி கொட்டுகிறது
இந்த உலகம் அதை
இமலாய உயரியம் என்று !

நல்ல குலத்தில் பிறந்தவன்
நல்ல குணத்தில் இருப்பதுதான்
இலக்கணம்; - இது
சாதாரணம் !

குலத்திற்கு மாறாய் - நற்
குணம் கொண்டிருப்பது அதிசயம்
உனை நான் பாடவும் - இது
ஒன்றே காரணம் !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமான பலவீனம்

''எனை பிடிக்குமா உனக்கு? ''
என நீ - என்
காதோரம் கேட்ட கேள்விக்கு
விடை சொல்ல முடியாது
விம்மினேன் ; - அன்றென்
எச்சில் எல்லாம் பசையானதோ
யானறியேன்; வார்த்தைகளெல்லாம்
நாவிலே ஒட்டிக் கொண்டன
தடுமாற்றம் தாண்டவமாடின
வார்த்தைகள் மௌன
ஆர்ப்பாட்டம் நடத்தின.

எதிர்பார்க்கவில்லை தான்
எதிர்பாராமல் உன்னிடமிருந்து - இப்படி
இடியைப் போன்ற - ஒரு
வினாவை....!

உன் இதழ் சிந்தும் வார்த்தைகளில்
இருக்கும் இதம் பிடிக்கும் - அதில்
ஒளிரும் திறன் பிடிக்கும்.

நீ பொழியும் நேசம் பிடிக்கும்
நேர்த்தியான உந்தன்
சேவை பிடிக்கும் - உன்
குறுநகை பிடிக்கும்
திருக் கரம் வடிக்கும்
கவி பிடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையை நேசிக்கும்
ரசனை பிடிக்கும் - அதிலே
வாழ விரும்பும் - உன்
வாழ்க்கை பிடிக்கும்
நாளை நீ
மாலை சூடிய பின் - உன்
ஸ்பரிசம் பிடிக்கும்
இத்தனை மீறியும்
இவைகளை தாண்டியும் - உன்னை
எனக்கு பிடிக்கும்

சொற் பூக்களால் கவிமாலை
கோர்க்க முடிந்தளவு - அதையுன்
திருக் கழுத்து நெஞ்சிற்கு அ(றி)ணிவிக்க
ஒரு போதும் முனைந்ததில்லை - எனக்கது
முடியவும் இல்லை
என்ன செய்யும் - என்
தமிழ் பெண்மை.....?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பேனையே...!

என் எண்ணப் பெண்ணின்
கவி பரதத்தை அரங்கேற்றிய
ஏக மேடை நீ தான் ! - அதன் பின்
அனைத்து கவி அபிநயங்களையும்
அங்கீகரித்து ஆடவிட்டு
வளர்த்ததும் நீ தான் ! - என்
கற்பனை கழுத்தை நெரித்து
கவி உயிரை கக்க வைத்த
அற்புதமே...! - எந்தன்
வலது கையும் நீ தான் - அதன்
பெரு விரலும் நீ தான் !

*06.07.2003*
*மித்திரன் வாரமலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்போடு தவிர்க்கிறேன்

என் ப்ரிய மிகு தோழனே...!
பிறிதொரு பிறப்பில்
உனக்கு நான் காதலியாக
இருக்க வேண்டுவதாய்
இயம்பிய என் நண்பனே ! - உன்
கருத்தோடு எனக்குண்டு முரண்பாடு - இந்த
விருப்போடு எனக்கில்லை உடன்பாடு !

தவழும் வயதிலே - நட்பில்
நடை பயிலலாம்; - காதலுக்கு
பருவம் வரும் வரைக்கும்
பதினாறோ, இருபதோ - அகவை
கடக்கணும் இருவரும் ! - இந்த
வருஷ விரயம் அவசியம் தானா?

பிறிதொரு பிறப்பில்
நீ எந்த மதமோ...?
நான் எந்த குலமோ...?
இரு வேறு துருவமாய் - நாம்
இருந்து போனால் - காதலில்
இணைய கிடைக்குமா? - நாம்
இரு குடும்பத்தால் ?

காதலை வெல்ல
ஈன்றவரை எதிர்ப்பது
தர்மம் தானா? - அன்றில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காதலாகி கசிந்து
கண்ணீர் மல்கும்''
இதய இம்சைக்கு
இஷ்டம் தானா...?

நாம் காதலராயிருப்பின் - நம்
உறவின் நீளமான
வெள்ளி ஆண்டை - தடையின்றி
வெற்றியோடு அண்மித்திருக்க
இயன்றிருக்குமா...?

நினைவில் நிறுத்திக் கொள்
நமது சமூகத்தில் - காதலுக்கு
அங்கீகாரமும் இல்லை - நல்ல
அந்தஸ்தும் இல்லை - நீண்ட
ஆயுளும் இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்பம்

இலக்கம் இலச்சினை
இதற்கொரு போலி நிறம்
இப்படி எதுவுமற்ற - நிஜ
வேட்பாளன் எனை விடுத்து - என்
எதிராளி சோகத்துடன்
சேர்ந்திருக்கும் சோதர்களே - உம்
அறியாமையை எண்ணுகையில்
நான் கூட
சோகமாகி போகிறேன் !

*04.11.2001*
*சக்தி F. M.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் இந்த கொடுமை வேறு எவருக்கும்....!

என் ஏகாந்த இருளுலகத்திலிருந்து
என்னை மீட்டிய - என்னால்
எய்த இயலாத
எந்தன் உன்னதமே!

நாம் இருவரும்
இணைய இயலாது
இருவேறு துருவம் என
அறிந்த பின்னும் கூட
உனக்காக காத்திருப்பதில் தான்
உணர்ந்தேன்; ஊர்ஜிதப்படுத்துகிறேன்
காதலுக்கு கண் மட்டுமல்ல
அறிவும் இல்லை என்று!

காதலித்து தோற்பதைவிட
காதலிருந்தும், காதலிக்க முடியாது
தோற்பது எத்தனை
கொடூரம் என்று!

அணுப் பொழுது கூட
அகல இயலுவது இல்லை - எனை
ஆட்கொண்டு ஆக்கிரமிக்கும்
உன் நினைவுகளிடமிருந்து!
ஆனாலும் நானறிவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டைப் பைக்குள் பனிக்கட்டியை
பத்திரப்படுத்த முடியாததை போலவே
உன்னையும் என்னால்
உரிமையாக்க - எனக்கு
உடைமையாக்க இயலாது என்று!

ஆன போதிலும்
சூரியனை நோக்கி யாத்ரிக்கும்
பீனிக்ஸ் பறவை போலவே
உன்னை நோக்கியே - எந்தன்
நாட்களும் முடிவிலியாய்
நகர்கிறது; அடைவது
பூச்சியத்தையே என்று - நன்கு
அறிந்து கொண்ட
பின்பும் கூட....!

*12.11.2006*
*மித்திரன்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களுக்கு இல்லை மரணம்

சட்டம் மூலம் மதத்தை
கட்டி வைக்க நாடாளுமன்றத்தில்
திட்டம் தீட்டும் - மத
தீவிரவாதிகளே......

சைவ நெறியில்
சார்ந்துள்ள தீது ஒன்று...?
தம்ம பதத்தில் உள்ள
தப்பு ஏதேனும்....?
யேசு சொல்லும் பைபிளில்
மாசு ஒன்றேனும்...?
குர் ஆனில் காண
குறை துளியேனும்...?
குறிப்பிட ஒன்னுமா
உம்மால்...?

செல்லும் வழிகள் நான்கு - இவை
சொல்லும் நீதி ஒன்று - இறுதியில்
சேரும் இடம் ஒன்று!

இருக்கும் இன பேதத்தில்
இழந்த இழப்புகள் போதும் - நாளை
மத மோகத்தில் - இன்னொரு
போர் மூள - நம் ஈழம்
தாங்காது....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்கள் நான்கும்
மனமொத்து வணங்கும் - அந்த
சிவ பாத மலையை - நாளை
நான்கினமும் உரிமை கோரி
சமர் தொடுத்து செத்தழிவதில்
சம்மதம் தானா உமக்கு?

இருக்கும் இனவெறி தீ
அனையும் முன் - இன்னொரு
மதம் பிடித்த மதத் தீயை
ஏற்றிடும் ஏற்பாடு - மகா
மடமையானது....!

சட்டம் கொண்டு
காக்க போவதாய் - மதத்தின்
மகத்துவத்தை மலிவாக்காதீர்!
எந்த மதமும் இதுவரை
தந்ததில்லை தீது - இதை
என்றும் மறவாதீர்....!

அச்சம் தவிர்
மதங்களுக்கு இல்லை மரணம்!
மடமை தவிர்
மனிதன் மனிதனாக
வாழ்ந்தால் போதும் - இதை
எந்த மதமும் செய்யும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒசாமா

உன் மார்க்கத்தை காக்க - நீ
தொடுப்பது புனிதப் போர் என
பொருள் படுத்தப்படுவதால் - தலிபானுக்கு
ஆண்டவன் நீ தான்
அமெரிக்காவையே ஆட்டிப்படைத்ததால்
அந்நாட்டை
ஆண்டவனும் நீ தான் !

*07.05.2006*
*மித்திரன் வாரமலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவர ஸ்நேகம்

ஆணான போதிலும் - நானும்
அவ்வப்போது தாயானேன்;
தாவர குழந்தை உன்னை
தத்தெடுத்த போது....

குறும்போடு நிலம் உடைத்து
அரும்போடு துளிர் கொண்டு
நின்ற போது - எனக்கு நீ
குழப்படி இல்லா
குழந்தையானாய்....!

இலைகளால் தலையாட்டி
தனக்குத் தானே விளையாடி
மௌனம் உரையாடி
நின்றாய் என்னோடு உறவாடி!

என்னுயரம் கொண்டு
வளர்ந்து வந்த போது - என்
தோல் உரசி
தோழனானாய் !

என்னை மீறி நீண்டு - உன்
நிழல் மடியில் எனை தாங்கி
எனக்கு தாய் ஆனாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் தீனி மட்டும் தானே
தந்தேன் நானுனக்கு? அந்த
ஒற்றை உபாயத்திற்கு
கிளை கொண்டு
நிழல் தந்து,
மலர் கொண்டு
மணம் தந்து
கனி கொண்டு
சுவை தந்து - நீ
காட்டும் கைமாறுதான்
எத்தனை எத்தனை?

''கோபுர தரிசனம்
கோடி புண்ணியம்;''
தாவர ஸ்நேகம்
அதனிலும் அதிகம் !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் காத்திருக்கிறேன்

முதலாம் திகதி நான்காம் மாதம்
முட்டாள் தினம் உலகோருக்கு
தேர்தல் தினமெல்லாம் முட்டாள் தினம்
இலங்கையருக்கு என்றாச்சு !

திருமணத்திற்கு காத்திருக்கும்
முதிர் கன்னிகள் போல
மழைக்காக காத்திருக்கும் - ஈரம்
மரித்த பூமி போல - நாமும்
நல்ல தலைவன் ஒருவனை
எதிர்பார்த்து ஏமாந்து
களைத்து போயாச்சு!

சவால் விடும் வாக்குறுதிகள்
யாவும் வெறும்
சம்பிரதாய வார்த்தைகளேயன்றி - அவை
ச(ா)த்தியமில்லை எனும் நிஜமறிந்து
சலித்து போச்சு!

பிரஜை உழவாளி விதைக்கும்
வாக்கு வித்துக்களின் அறுவடையை
வேட்பாளன் அபகரிக்கும் அகோரம்
துரோபதை துகிலாய் முடிவிலியாச்சு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன போதிலும் - மனதில்
கனவுகளுடனும் - கையில்
மாலையுடனும் காத்திருக்கும்
சுயம்வர பெண்ணாய்
நானும் காத்திருக்கிறேன்!

ஒப்பனை இல்லா
வார்த்தை பேசி
அடிப்படை அவசியங்கள் அனைத்திலும்
அடிமட்டத்திலிருக்கும் என்னூரை
அபிவிருத்தி செய்யும் நாயகனுக்காக
கையில் வாக்கோடும்
நெஞ்சில் ஏக்கத்தோடும்......!

*31.03.2006*

*Metro News.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்

தினசரி உன்
தரிசனத்திற்காக காத்திருந்து
தோற்றுப் போகிறோம் - இதில்
ஏமாறுவது எங்கள்
இதயம் என்றால்,
பாதிப்படைவது இளைஞர்
எங்கள் எதிர்காலம்.....!

*24.08.2003*
*மித்திரன் வாரமலர்*



# போதை

தோல்விகளில் தொலைந்த
நேற்றுகளின் வலியை
இன்றுகளில் மறக்க - உன்னை நாடி
ஆரோக்கியமான நாளைகளை - நான்
சூனியமாக்கிக் கொண்டேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகசியத் தேர்வு

உன் வரவிற்காக
தாண்டவமாடும் தடுமாற்றத்தோடு
கால சிலுவையை சுமந்து - நான்
காத்திருப்பு தவம் புரிவதில்......

சொல்ல வரும் எண்ணங்களை
சொல்ல எத்தனித்து எத்தனித்து
சூனியமாகிப் போகும்
தைரியத்தால் மௌனியாகி
திணறித் திக்குமுக்காடுவதில்......

ஆடியில் பட்டுத் தெறிக்கும்
ஒளி விம்பம் போல - எனை நீ
கடந்து போகும் போது - அழுது
அடம் பிடித்துக் கொண்டு
என் இதயக் குழந்தை
உன் பின்னே ஓடிப் போவதில்.....

உன் சாயல் கொண்டோரை
காணும் போதும் கடக்கும் போதும்
பொத்துக் கொண்டு வரும்
ரகசிய பாசத்தை கட்டுப்படுத்த
திக்கி திணறுவதில்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் துளியளவு தொடுகையில் - என்
சமநிலை பறிபோவதாய்
சட்டென்று எழுந்து
சுதாகரிக்க வைக்கும் - என்
கனவின் தொந்தரவால் - தினம்
தூக்கம் தொலைத்து
திண்டாடுவதில் ........

சத்தியமாய் புரியவில்லை - நானும்
உனை காதலிக்கின்றேனோ
என்று ................................?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தம்

'குடைக்குள் மழை'
பார்த்திபன் படம்
திரையரங்கில் !
குடைக்குள் குடித்தனம்
காலி முகத்திடல் நிஜம் - அதன்
கரைமருங்கில்.



# அறிவிப்பு

உனது நோக்கம் - என்னை
கவிஞனாக்குவது என்றால்
கற்று தந்திருக்கலாம் ;
காதலித்து விட்டு பிரிந்திருக்க
வேண்டியதே இல்லை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லுங்கள் அப்பா!

எழுதினேன் ஓர் நூல்
என்று சொன்ன போது - உங்கள்
இரு விழி வழியே
இறங்கிய நீருக்கு
என்ன பொருள் அப்பா?

யாதுவாக நான்
பரிணமிக்க - நீங்கள்
கொடுத்தீர்களோ கனவு?
அதை நான்
செய்து முடித்தேனா?
சிதைத்து தொலைத்தேனா....?

என் ரசனை
பக்கமே பறந்தேன் - உங்கள்
ஆசை எதுவோ - அதை
அறிய, தீர்க்க மறந்தேன்!

பெற்ற கடன் என்று
பெற்றோரிடம் பிள்ளைகள்
ஏராளம் பெறுகிறோம்
பிள்ளையின் கடனாக
பெற்றவர்கள் எதிர்பார்ப்பது - தம்
கனவு தீர்ப்பதையும் - தமக்கு
பெருமை சேர்ப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் தானே? - இதை நான்
ஈடு செய்தேனா?
இயம்புங்கள் அப்பா?

வம்சத்தில் இல்லாத ஒரு
வர்க்கத்துக்குள் புகுந்து - எனை
வளர்த்துக் கொண்ட - எந்தன்
வகுப்பின் மீதும்
இரு விழி வழியே
இறங்கிய நீருக்கும்
அர்த்தம் என்ன அப்பா?
வருத்தமா....?
விருப்பமா......?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினம்

வருடத்தில் ஒரு நாள்
உழுதுழைக்கும் மாக்களுக்கென்று
வகுத்தோம் ஒரு தினம்
பொங்கலென்று! - மாடாய்
உழைக்கும் மக்கள் எமக்கும்
ஒதுக்கினோம் ஓர் தினம்
உழைப்பாளி தினம் என்று !

இரு திணைகளின் - இந்த
இரு தினத்தையும் இணைத்து பார்த்தால்
இருக்கின்றோம் மக்கள் நாம்
மாக்களிடம் தோற்று.....!

விடியலோடு சுகக் குளியல்
விசேடமான பொங்கல் சமையல்
கொம்புக்கு பட்டு
குறு நெற்றிக்கு பொட்டு
அன்று மட்டுமாவது
முழு நேர ஓய்வென்று
தன் தினத்தை ஓர்
அ்.றிணை அர்த்தம் சிதைக்காமல்
அனுபவிக்கிறது !

உழைப்பாளி தினத்தன்று
'எம் தினம் இது' என்க
எமக்கு ஏது உண்டு.....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதை மயக்கும் - தலைவன்
வார்த்தை கேட்க
நிலத்திற்கு குடையாய்
நாமே நின்று
கைக் கொட்டி கைவலித்து
கோஷமிட்டு குரலடைத்து,
ஊர்வலம் சென்று கால்கடுத்து
ஓய்வு பழி கொடுத்து - பசியோடு
வீடு திரும்பும்
இதுவா உழைப்பாளி தினம்....?

இரு திணைகளின் - இந்த
இரு தினத்தையும் இணைத்து பார்த்தால்
இருக்கிறோம் மக்கள் நாம்
மாக்களிலும் விட மலிவாக.....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை வறுமை

சொல்ல வேண்டிய கருத்தை
சொல்ல வரும் போது
சொல்ல முடியாமல் அவை
செல்லும் போது - அவற்றை
'சொல்ல வார்த்தை இல்லை' என்று
சொல்லுவதை கொல்வோம் !

சொற்கள் மொத்தம்
லட்சம் மூன்றைக் கொண்ட
அட்சய பாத்திரமாம் - அழகு
கொஞ்சும் தமிழில் - வார்த்தைக்கு
பஞ்சம் ஏற்பட என்றும்
கொஞ்சம் இல்லை வாய்ப்பு...!

சிதறிக் கிடக்கும்
சொற் பூக்களை
சேர்த்து சொல்லும்
கோர்வை திறன் அற்ற
சோம்பேறிகள் நாம் - தேடல்
திறன் பெறுவோம் - தமிழில்
வார்த்தைக்கு என்றும்
வறுமை இல்லை - என்ற
பெருமை கர்வம் கொள்வோம்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானப் பேச்சு...

இந்த எத்தனிப்பை
வாழ்த்த அல்ல
வணங்கத்தான் தோன்றுகிறது !
ஆனாலும் - தன் பிள்ளை
ஊமை என்றறிந்ததும்
ஓர் தந்தை அக்குழந்தையை
வக்கீலுக்கு படிக்க வைக்க
முனையும் தீவிர
முயற்சி போலவே போகிறது
ஒவ்வொரு முறையும் சறுக்கி
சாத்தியமாகாமல் போகும் போது...!

*23.06.2006*
*Metro News*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப் பொருள்

என் நெற்றிப் பொட்டில்
எப்போதும் நீ வந்து
நிற்பது நிஜம் !

வல்லரசுகள் வறிய நாடுகள்மீது
படையெடுப்பது போல - எந்தன்
ஒவ்வொரு இரவின் உறக்கத்திலும்
நீ வந்து ஆர்ப்பரிப்பது நிஜம் !

தள்ளிப் போக எத்தனித்து
ஓர் அடி ஒதுங்கினால்
போட்டி இட்டு கொண்டு
ஓடி வந்து போர் தொடுக்கும் - உன்
நினைவுகளோடு போராடி
தோல்வி தழுவுவது நிஜம் !

சோடியாய் குலாவும் காதலரை
சோற்றுக்கு ஏங்கும்
சோமாலிய குழந்தை போல
ஏக்கத்தோடு நோக்குவது நிஜம் !

உன்னை நேரே
நோக்க தவி(ர்)க்கிறேன் - உன் காதலை
ஏற்க மறுக்கிறேன்; - உன்னை
அணுக அங்கீகரிக்காத அறிவும்
உன்னிடமிருந்து விலக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்காத அன்பும் நடாத்தும்
பட்டி மன்ற சர்ச்சையில் சிக்குண்டு
பைத்தியமாகிப் போவதும் நிஜம் !

ஓட்டுக்குள் உடல் மறைக்கும்
ஆமை போல - என் காதலை
எனக்குள்ளே ஒளிப்பதும்
சூல் கொள்ளும் ஆசைகளை
சொல்லாமல் கொல்வதும்
சொல்லில் வடிக்காத நிஜம்!

கட்டாயமாய் என்னிதயத்தை
கஷ்டப்பட்டு கட்டுப்போட்டு
கட்டுப்படுத்துவதற்கு எல்லாம்
ஏக காரணம்
ஈன்றவர்களுக்கு எதிர்ச் செயல்
காதல் என்பதாலே.....! - இதுவே
நிஜங்களின் நிஜம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊமை அதிர்வு

உன் நிழலை மிதிக்கக் கூட
என் பாதம் அனுமதிக்காது - உன்
பெயரை யாரும் அழுத்தி உரைத்தாலும்
என் கண்கள் கசிகிறது - உனை
செல்லமாக கிள்ளினால் கூட
என் நெஞ்சு வலிக்கிறது - இப்படி
நானுன்னிடம் இருக்க
நீ மட்டும் ஏன் - எப்போதும்
என்னிடம் கடிந்து கொண்டே.....?
வரதட்சணை இன்றி - நான்
வாக்கப்பட்டு வந்தவள் என்பதாலா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர அழைப்பு

அம்மா அஷ்டலக்சுமிகளே....!
உங்களில் ஒருவருக்குக் கூட
எங்கள் வீட்டின் விலாசம்
தெரியாது போனது ஏனோ...?

தடயங்கள் சொன்னால் - உங்கள்
இதயங்களில் வைத்து - ஒருமுறை
வந்து போவீர்களோ....?

விறகுக்காரி வீடு
எதுவென கேட்டால்
ஓர் ஓலை குடிலை
ஊர் காட்டும் தாயே....!

தேடித் துவள தேவையில்லை
வறுமை எஜமானாக வாழும்
ஒற்றை குடில் இதை
ஒரே நொடியிலே இனங்காணலாம் !

ஆனாலும் யாது பயன்? - நீ
வர மறந்தாய்;
உன் புருஷன்
என் புருஷனை
காக்க மறந்தான்

விறகு கொண்டு பிள்ளைகளை
துளிர்க்க வைத்த நானுமின்று
விறகாய் விரைத்து போனேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகளும் எம்மைப் போல
ஏழையோ? என் பிள்ளைகளோடு
மெத்த சிநேகம் கொண்டு - கல்வி
செல்வம் தந்தும், - இருந்துமது
செல்லாத காசாய் அரசிடம்.....!

நீ வாராத குறையால் - என்
தலைப் பிள்ளையின் தலைவிதி
முப்பது முடிந்து - வருஷம்
மூன்று ஆகியும் இன்றும்
செல்வியாக இருக்க
பின்னவள்களும் இவளால்
பின்(வா)தங்கி நிற்க....

கண்ணகி போல வாழ்ந்து
பட்ட துயர் போதுமென்று
பாஞ்சாலியாய் ஐவருக்கு ஒருவராய்
பரிணமித்து போகும் முன்

ஐயனே நாராயணா
ஏதாவது ஒரு
கலகம் பண்ணு!
அப்பனே ஈஸ்வரா
இன்னொரு திருவிளையாடல் பண்ணு
தாய் லட்சுமியை - ஏழை
குடில்களுக்கு அனுப்பு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் வாரிதியே....

மனிதர் எம் தாகத்திற்கு - உன்னை
அருந்தியது கூட இல்லையே
எம்முயிரை பருகி பார்க்குமிந்த
வக்கிர விடாய் ஏன் வந்தது
வாரிதியே....!

நீரினால் நாடு
செழித்ததாய் தானே - இதுவரை
இருந்தது சரித்திரம்? - இன்று
இஃதென்ன நீரினால் நாடு
சிதைந்ததாய் ஒரு
புதிய தரித்திரம்....?

நீர் உயர நெல் உயர்ந்து
குடி உயர்ந்து கோன் உயரும் என்று
குதூகலித்த ஔவைக் கூற்று
குட்டிச் சுவராகி - நீர் உயர
நெல் அமிழ்ந்து குடி அமிழ்ந்து
கோன் கவிழ்ந்து போனதுவே...!

உயிர் வாழ வைக்கும்
உன்னத வஸ்துனக்கு
நிறமில்லை; நிரந்தர
உருவில்லை; மணமில்லை என்று
விஞ்ஞானம் கற்றேன் - அஃதோடு
உனக்கு இதயமும் இல்லையென்று
இன்று மெய் ஞானம் கண்டேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியாய், அருவியாய்
ஓடையாய் ஊற்றாய்
பெண்மையாய் வெல்லமான - நீ
வன்மையாய் வெள்ளமாய்
விஸ்வரூபம் கொண்டு
பூகோளத்தை ஜலசமாதியாக்கியது
போதும் வாரிதியே...

கோபுரங்களை குடைந்தாய்
குழந்தைகளை கூட குடித்தாய்
வீண் கர்வம் கொண்டு
விஞ்ஞானத்தையும் வென்றாய்!

நீ வாரிச் சென்ற
உயிர்உடைமைகளை - திருப்பி
வழங்க வேண்டாம்; - மீண்டும்
ஓர் முறை நீ
வாராதிருந்தாலே போதும் !

பொங்கியது போதும் - தரணியில்
முக்கால் வாசி வியாபித்திருப்பதும் போதும்
முழுவதும் நீயாக இருக்க
சர்வாதிகார பேராசை கொண்டு
பேரழிவு தராது
போய் விடு வாரிதியே! - பூமியில்
கல்லறைகள் இருக்கட்டும் - பூமியையே
கல்லரையாக்கிவிடாமல்
போய் விடு வாரிதியே....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிந்திருக்கலாம் அன்பே

நெஞ்சில் உறுத்தல்
ஒன்றின்றி - (உ) என்
எண்ணம் போலவே
ஒரு முறை
உன்னை நானும் - நெஞ்சார
காதல் செய்திருப்பேனே!

நிந்தனோடு வாழ்ந்த - ஒற்றை
நிமிடமே போதுமென - அதுவே
யுகத்திற்கு ஈடென
அகம் ஆறி இருந்திருப்பேனே!

தீப் பிழம்பை உள் வைத்து
மூச்சு விடாமல்
திரண்டு நிற்கும்
எரிமலையாய்.....

தீவிரவாதிக்கு
அடைக்கலம் அளிக்க
நேரிட்ட ஒரு
தேசபக்தரின் திண்டாட்டமாய்

உன்னை என்
உள்ளத்தின் உள்ளே
ஒளித்துக் கொண்டு
அல்லலுரும் அவஸ்தைக்கு
ஆளாகாமல் இருந்திருப்பேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் வைத்த பாவத்திற்கு
விலகவும் முடியாமல்
நேசிக்க முடிந்தளவிற்கு
நெருங்கவும் முடியாமல்
திரிசங்கு சொர்க்கத்தில் சிக்கி
திண்டாடாமல் இருந்திருப்பேனே!

உன்னை சார்ந்த
உண்மைகளான - உன்
கடந்தகால காதலையும்
நிகழ்கால திருமணத்தையும்
என்னிடம் நீ
ஒளித்திருந்தால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ!

குட்டி பனிமலை புட்டிக்குள்
குடி இருக்கும் எரிமலை
ஹைக்கூ !

கனந்தாலும் கழட்டி வைத்துவிட்டு
பயணிக்கவா முடியும்
நத்தைக்கு கூடு?

மழைக்கு நிலம் பிடிக்கும்
குட்டி குட்டி குடைகள்
காளான்!

காமுகன் போல - உனை
கட்டித் தழுவ ஆசை தான்;
சாத்தியமில்லையே சங்கீதமே !

எத்தனை முறை தொட்டிருக்கிறேன்
இன்றும் புதிதாய் தான் வெட்கப்படுகிறாய்
தொட்டாற் சிணுங்கி.

நீ என்ன வடக்கு திக்கா? என்
எண்ண திசைக்காட்டி எப்போதும்
உன்னை நோக்கியே......!

பக்க அடையாளம் போல - என்
புத்தகங்களில் பல இதயத் துகள்கள்;
உந்தன் கடிதங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு நானிளைப்பது துரோகம் தான்
காதல் தாலியை உனக்கு கட்டிவிட்டு
குடித்தனம் தனிமையோடு!

எனக்கென என்னிடம்
இருக்கும் ஒற்றை ரகசியம்
நீ!

நானிளைத்த பிழைகளில்
எனக்கு பிடித்த பிழை
உன் மீது காதல்.....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு

தரை பஞ்சம் கொண்டு
ஆகாயத்தை அபகரித்து
வானை எட்ட எத்தனிக்கும்
கட்டிடங்கள்...

புற்றீசலாய் புறப்படும்
வாகனங்கள்.....

கிறுக்கல் சித்திரமாய் - அறிவை
சறுக்க வைக்கும்
சாலைகள்......

கற்பிழந்த கலாசாரங்கள்.....

பஞ்ச மா பாதகங்களுக்கு
பஞ்சமே இல்லை......

மரணங்கள் கூட இங்கு
மிக மலிவு தான்.....

குப்பைகளும் குற்றங்களும்
ஒன்றுதான் - இரண்டும்
அள்ள அள்ள குறைவதே இல்லை !

கலவரம் என்றால் - உயிருக்கு
கடுகளவும் உத்தரவாதம் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் உன்னை பற்றி
பலரும் உளரும் சாராம்சம்
இவைகளை தாண்டியும்
உள்ளது உன்னில் சமாச்சாரம் !

உனக்கு தான் எத்தனை
தயாள குணம்?
தாராள மனம்? - உன்னை
நம்பி வரும் - அத்தனை
ஜீவிகளுக்கும் புகலிடம் கொடுப்பதில்
நீதானே பெறுவாய்
முதலிடம்?

அரசு தராத தொழிலை
நீ தானே தருகிறாய்....'
நீ ஒரு கோவில்
''செய்யும் தொழில் தெய்வம்'' எனில்
அந்த தெய்வம் வாழுமிடம்
கோவிலன்றோ.....!

நீ ஒரு
குழந்தை காமதேனு
யாரின் தேவை யாதோ
அதை அளிக்கிறாய்....!

குபேரனாவதும் - ஞான
குருடனாவதும்
அவரவர் நிர்ணயிப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்த்த மரமே
கல்லடி படுவது போல
வந்தவரையெல்லாம்
வாழ வைக்கும்
உனக்கும் இறுதியில்
வசையே கிடைக்கிறது....!

நீ ஒரு
அட்சய பாத்திரம்
உயரியம், உபத்திரம்
தெய்வீகம், பூதாகரம்
அனைத்தும் அடங்கும் - தெரிவது
அவரவர் உரிமை!
கையாளுவது
அவரவர் திறமை - உன்னை
குறை கூறுவது
அவரவர் அறியாமை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை உபதேசம்

''இது என்ன வாழ்க்கை?''
என்று சலிக்கும் மானுடமே..

திணைகளில் உயர்வு
நீங்கள் தான்
அறிவுகளில் அதிகம்
உமக்கு தான்
கல்வியும் காசும்
உம்மிடம் தான் !
ரசிக்கும் மனதும்
உம்மில் தான்!

கர்வம் கொள் மனிதா
வாழ்வை வளப்படுத்த
இவை போதாதா....?

புலன்களும் மூளையும்
பணமல்ல மனிதா
செலவழிக்க தயங்குவதற்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்கோடு

வணக்கம் சொல்லி
வகுப்பறை வந்த குரு
நேர் கோட்டிற்கு
நீண்ட உதாரணம் ஒன்று
சொல்ல கேட்டார்.

அழகாக அசாதாரணமாக
அதேவேளை அதன்
லட்சன இலக்கணம்
கொஞ்சமும் சிதையாமல்
இருக்க வேண்டுமென்றார்.

இந்த வரம்புக்குள்
இருந்தால் பதில் - பொன்காசு
இரண்டு தருவேன் என்றார்!

அடுத்த பொழுது - வகுப்பறை
தேர்தல் களமானது !

வேட்பாளர் - வாக்காளர்
இரண்டுமாக மாணாக்கள் !

பயிற்சி நூலின்
பதில் பார்த்தார் ஆசான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வாத்தியார் பிள்ளை | : | வளையாத பிரம்பு |
| வாத்தியகார பிள்ளை | : | யாழ் நரம்பு |
| பணக்கார பிள்ளை | : | ............... |
| வைத்தியர் பிள்ளை | : | ஊசி |
| அரசியல்வாதி பிள்ளை | : | கொடிக் கம்பம் |
| மேசன் பிள்ளை | : | அடிமட்டம் |
| ஓவியன் பிள்ளை | : | படச்சட்டம் |
| பொலிஸ் பிள்ளை | : | லத்தி |

பதில் பார்த்த ஆசானின்
இருண்ட முக பாவம்
பெறுபேறு அறிவித்து - அவை
பொருத்தமற்றவை என்று !

கடைசியாய் ஒரு பதில்
கண்ட ஆசான்
கண்கள் ஒளி கொண்டு
வியப்பில் புருவம்
நெற்றித் தொட்டு
அனிச்சையாய் அது கவிழ்ந்து
ஆராய்ந்த ஆசான்
பூரித்துப் போனார் - பரிசை
கவ்விப் போனான் - அந்த
கவிஞன் பிள்ளை கடலும் வானும்
இணைந்த தோற்றம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்ணிலவின் பொன்பொழுது

பிஞ்சு வயது கொண்டு
பால் நிலா மீது பிரியப்பட்டு
நெஞ்சு தனை பறிகொடுத்து
நெகிழ்ந்து போனதுண்டு.

பஞ்சு முகில் மேகமது
பால் நிலவை மூடும்போது
வஞ்சி மகள் நெஞ்சு வெந்து
வதங்கி போனதுண்டு!

முழுமையாக நீ வரும்
தினமெல்லாம் இரவுகள்
இருபத்து நான்கு மணியாய்
இருக்கக் கூடாதா என்று
ஏங்கியது உண்டு!

நிலவே நிலவே - எந்தன்
நினைவில் என்றுமே
நிலவும் நிலவே - நிந்தன்
நிமிஷங்களின் பொன்பொழுது
எதுவாக இருந்திருக்கும்....?

பிஞ்சு மழலைக்கு ஏழைகள்
வெண் நிலவே உனை காட்டி
கஞ்சு பாற்சாதம் ஊட்டுவாரே
கனிந்த அந்த பொழுதாக இருக்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டந்த அல்லி மலர்
மூடிய இதழ் விட்டு
பட்டென விரிந்து
பல்லைக் காட்டுமே
அக்கணமாக இருக்குமோ?

கண் சிமிட்டும் தாரகை கண்டு
கலியாண பெண் போலிங்கு
மண் பார்த்து மண் பார்த்து
மௌனமாய் நானுமே - அந்த
வெட்கப் பொழுதாக இருக்குமோ...?

சிந்தாகுலத்தோடிருந்த பாரதிக்கு
சிந்தாம(ணி)தியாக வந்து
சிந்து நதிக்கரையில் கவிகாதல்
சல்லாபம் சிந்தியதே
அதுவாக இருக்குமோ....?

இருக்காது; இவைகளில்
எதுவாகவும் இருக்காது - என்று
எம்மினம் நிலவில்
எள்ளளவும் களங்கமில்லை என்று
உரைக்குமோ - அதுவே
நிலவுக்கு பொன்பொழுதாக
அமைந்திருக்கும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயவுசெய்து இயம்பு

உனக்காக காத்திருந்து
காத்திருந்து காலம் ஓடுவதிலே
எந்தன் வாழ்நாள்
காணாமல் போயிடுமா?

உடல் எங்கோ, எப்படியோ
உயிரை ஒளித்து வைத்துக் கொண்டு
காலத்தை கடத்துவது போன்றே
என்மீது உனக்குள்ள காதலையும்
என்னிடமே வெளிப்படுத்தாமல்
இருந்திடும் இந்த கண்ணாமூச்சு
நடிப்புக் கலையை
எங்கே கற்றாய்? - இதில்
என்ன சுகம் கண்டாய்?

உன்னையும் என்னையும்
ஒன்று சேரவிடாத - நம்
உறவினர்களுக்கு ஒத்துழைக்கும்
காலத்திற்கு நீயும் உடந்தையாகி
என் எண்ணமெல்லாவற்றையும்
சின்னாபின்னமாக்கிடுவாயா...?

உன் செயற்கை
சிருஷ்டிப்பான வரட்டு தவிர்ப்பும்
வெறுப்பு ஒப்பனையும் - என்
காதலுக்கும், பொறுமைக்குமான
உனது விஷத் தேர்வா....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் ''இல்லை'' என்று
தவணை முறையிலாவது
தயவு செய்து இயம்பு - என்னுடல்
இன்னும் சில நாள்
உயிர்தாங்க வேண்டும்; - அதுவும்
உன்னுடன் வாழ வேண்டும்
என்பதற்காக....!

*18.06.2004*
*Metro News*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கே தெரியாமல்

கவின் மிகு
ஒயிலழகு மண்டபம்
காதை மயக்கும்
காண வாத்தியங்கள்
மறு புறம்

கண்டறியாத முகங்கள்
நன்கறிந்த முகங்கள்
அதன் முழுவதும்! - அ.

அத்தனை முகத்திலும்
ஆரவாரித்து ஜொலித்தது
பேரானந்தம்!

நடைபெறும் சம்பவம் யாது?
நானிங்கு வந்தது எவ்வாறு...?
எல்லோர் முகத்திலும்
பொங்கும் பூரிப்பிற்கு
பொருளும் தான் என்ன...?

புதையல் அகழும்
ஆவலாய் எழுந்த - என்
குழப்பக் கோடுகள் - என்னோடு
கபடி ஆடிக் கொண்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன்
தேடலின் எல்லையில் - என்
தலை சிதறும் காட்சியாய்
மணாளன் கோலத்தில்
மணவறையில் உனை காண

ஒரு கணம் - என்
இதயம் துடிக்க மறுத்தது;
மறு கணம் - ஆவேஷம்
ஆழிப் பேரலையாய் எழுந்தது!

அகிலமே அதிருமளவிற்கு
அலரிய என்னோசை கேட்டு
அதிர்ச்சியோடு - என்னை
எழுப்பிய தமக்கை
''ஏன்'' என்று கேக்க
உணர்ந்தேன் கண்டது
கனவு என்றும்

ஆசுவாசம் அடையாது
அங்கலாய்த்த மனதால்
மடை திறந்த வெள்ளமாய்
விழிகளில் பெருகிய நீர்
விளக்கி போனது
இத்தனை நாள்
எனக்கே தெரியாமல்
என்னில் இருந்த
உன் மீதான காதலையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவிலாவது
# மெய்ப்பட வேண்டும்

பல லட்ச பட்டதாரிகளை
படைத்துக் கொடுக்கும்
பட்டதாரி உனக்கு - என்
உள்மனதை படித்து பார்க்க
தெரியாத விநோதம் - என்ன
விகாரமடி...?

அனுமானுக்கு இருந்த
அபூர்வ சக்தி எனக்கிருந்தால்
இதயத்தை கிழித்து - அதன்
உள்ளிருக்கும் உனை
உனக்கு காட்டிடுவேன்!

பெண்மைக்கே உரித்தான - உன்
பொறுமையின் உச்சம் - உண்மையில்
வாழ்த்தத் தக்கது தான் - எந்தன் காதலுக்கு
வரவேற்க தக்கது அல்ல!

கண்ணுக்கு புலப்படாத
ஓசோன் படையின்
ஓட்டைகள் போல் - என்
உள்மனதின் ஊமை காயத்தையும்
அதன் உயர்திரு வலியையும்
உவமைக்குள்ளும் உதாரணத்திலும்
வெளிப்படுத்த வார்த்தைகளுக்கு
அத்தனை வலிமையும் இல்லை;
எனக்கவ்வளவு திறமையும் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியாக சிரித்து
பொய்யிற்கு மகிழ்ந்து - என்னை
நானே ஏமாற்றிக் கொண்டு
நாட்களை நகர்த்தும் - இந்த
முகமூடி வாழ்க்கைக்கு - ஒரு
முற்றுப் புள்ளி வேண்டுமடி!

இன்றைய கனவிலாவது - வந்து
இயம்பி விட்டு போ - நானொரு
இறுதி முடிவு எடுக்க வேண்டும்
இனியும் என்னால்
இயல்பாக இருப்பது போல
நடித்துக் கொண்டு
இருக்க முடியாது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முது மொழியின் புதுப் பொருள்

''பெற்ற மனம் பித்தாம்
பிள்ளை மனம் கல்லாம்
நிஜம் தான் !
பல சமயங்களில் - சில
பெற்றோரின் பித்துத்தனமான
பிரதிபலிப்பால் - பிள்ளைமனம்
கல்லாகிப் போகிறது.

## கதிரை


எல்லோரையும் இருத்திடும் நாம்
உடைந்து ஊனமாகும் வரை
நின்று கொண்டே....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை
## &
## பிரசவம்

முந்நூறு நாள் சுமந்ததை
முடக்கப்பட்ட நேர எல்லைக்குள்
இறக்கி வைத்திட நேரும் போது....
எதிர்ப் படும் இம்சையை வெல்ல
எத்தனிக்கும் சுய போராட்டத்தில்
இரண்டும் ஒத்துழைத்த பின்
அடடா.... அதன் பின் தான்
என்ன சுகம்? சுகம்......?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்தத் தொகுதியைப்
பார்க்கும்பொழுது
லுணுகலை-ஸ்ரீ இன்
கவித்துவம்
எல்லாவிடங்கலில்லை
என்றாலும் அது
நிச்சயமாக உள்ளது.
(முரணிலை
வார்த்தைகளுக்குள்ளே
சொற்சாதுரியம்
இருக்கலாம். ஆனால்
பெரும்பாலான
வேளைகளிலே
கவிதையிருப்பதில்லை)
புதுக் கவிதையென்பது
சொற்சாதுர்யம் அல்ல)
கவிதை மனநிலை
உணர்ச்சிகளைத்
தளமாகக் கொண்டது.
ஆனால் இறுதியில் ஓர்
உணர்கை ஏற்பட
வேண்டும்.
லுணுகலை-ஸ்ரீ யிடம்
கவித்துவப் பயணத்தை
மேற்கொள்வதற்கான
தகுதியுண்டு.

செல்வி லுணுகலை-ஸ்ரீ
அவர்களின் கவியாக்கம்
கண்டேன்.
முன்னுரை கேட்டு வந்திருந்தார்.
அன்பு, அறிவு, அடக்கம்
அத்தனையும் அவரின்
நடைமுறையில்
காணமுடிந்தது.
இப்பண்புகள் கல்வியின்
கால்கள்.
தக்கபாத்தியில் தக்கபடி
பயிரிடப்பட்டிருந்தால்,
விருட்சமாயிருந்திருக்க
வேண்டிய வித்து.
கவித்துவம் அவர் கைவசம்
உண்டு.
அதைக் கவிதைகள்
சொல்கின்றன.
தன் இயல்பாற்றலை மட்டுமே
நம்பி கவியாத்திருக்கிறார்.
அவர் இளமைக்கு இவை
ஏற்றமே.
ஆனாலும் லுணுகலை- ஸ்ரீக்கு
காலம் இன்னும் நிறைய
இருக்கிறது.
இயல்பாற்றல் நிறைந்த
இவருக்கு,
கவிதைக்கடலுள் கால் வைப்பது
ஒன்றும் கடினமல்ல.
முயல்வாராக!
இம்மொட்டு போதாகி
மலரட்டும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org